24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 162 சித்திரை 26ஆம் நாள் வியாழக்கிழமை 09 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050



# எதிர்வரும் 13ஆம் திகதியன்று குண்டு வெடிக்கும் பேராபத்து

## பொன்சேகா எச்சரிக்கை

கொழும்பு, மே 9

எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளவத்தை, நாவல, பஞ்சிகாவத்த போன்ற பகுதிகளில் குண்டு வெடிக்கும் ஆபத்து உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா. நாடாளுமன்றில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது:

19

## வவுனியா மறுவாழ்வு நிலையத்தில் அகதிகளை தங்கவைக்கத் திட்டம்

### உள்ளூர்த் தலைவர்கள் நிராகரித்தனர் எனத் தகவல்

வவுனியா, மே 9

ஆப்கானிஸ்தான், சிரியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து அகதிகளாக இலங்கைக்கு வந்து தஞ்சம் கோரியுள்ளவர்களை வவுனியாவில் உள்ள மறுவாழ்வு நிலையத்தில் தங்கவைப்பதற்கு அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன முன்வைத்த திட்டம் வவுனியா அரசியல் வாதிகள் மற்றும் அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டது என்று வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

குறித்த அகதிகளை வவுனியாவில் தங்கவைப்பது

19

### தௌஹீத்ஜமாத் அமைப்பைச் சேர்ந்த

## நன்கு பயிற்சி வழங்கப்பட்ட 7 தற்கொலைதாரிகள் கைது

கொழும்பு, மே 9

காத்தான்குடியைச் சேர்ந்த, தேசிய தௌஹுத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்களான - நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட ஏழு தற்கொலைக் குண்டுதாரிகள் அம்பாந்தோட்டையில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் வட்டாரங்களில் இருந்து

06

## சமூகங்களுக்கு இடையிலான பிளவு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

### பயங்கரவாதத்தை ஒழிப்பது தொடர்பில் அநுரகுமார இவ்வாறு இடித்துரைத்தார்



கொழும்பு, மே 9

நாட்டிலுள்ள அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படுவதன் மூலமும், அனைத்து இனத்தவரினதும் உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலமுமே எந்தவொரு பயங்கரவாத செயற்பாட்டையும் முழுமையாகத் தோற்கடிக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். சமூகங்களுக்கிடையில் பிளவு காணப்படுமானால் எவ்வளவு தூரம் பாதுகாப்பைப் பலப்படுத்தினாலும், தொழில்நுட்பத்தைப்

19

## இரு அதிகார முனைகளாலேயே பாதுகாப்பில் தொய்வு ஏற்பட்டது!

### நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, மே 9

அரச தலைவர், தலைமை அமைச்சர் என்று இரண்டு அதிகார முனைகள் அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவே

19

## முஸ்லிம்களிடம் ஆயுதங்கள் மிகப் பாரதூரமான செயலே!

### இனக்கலவரமும் முக்கிய இலக்கு என்கிறார் வாசுதேவ, நாணயக்கார

கொழும்பு, மே 9



முஸ்லிம் மக்கள் பெருமளவிலான ஆயுதங்களை வைத்திருந்தமையின் நோக்கம் பாரதூரமானது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

06

## இரட்டைக் குழந்தைகளில் ஒன்று கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழப்பு

### மன்னாரில் சோகம்

மன்னார், மே 9

வளவுக்குள் விளையாடிக் கொண்டிருந்த இரட்டைக் குழந்தைகளில் ஒன்று கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்த துயரம் மன்னாரில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

பேசாலையைச்

19

## தேர்தலுக்கான அவசியம் தற்போது எதுவுமில்லை!

### குமார வெல்கம நேற்றுச் சாட்டை

கொழும்பு, மே 9

நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்த குண்டுத்தாக்குதல்களால் ஏற்பட்ட துயரத்திலி ருந்து மக்கள் இன்னும் மீளவில்லை. இவ்வாறான நிலைமை

06

## பல்கலை மாணவர்களுக்கு பிணை வழங்கப்படவில்லை

### தற்போதுதான் ஆராய்கிறோம் என்று சட்டமா அதிபர் திணைக்களம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவருக்கும் செயலருக்கும் பிணை

19

### மன்னார் மனிதப் புதைகுழி விவகாரம்

## நீதிமன்றத்தால் கோரப்பட்ட அறிக்கை வழங்கப்படவுள்ளது

மன்னார், மே 9

மன்னார் மனிதப் புதைகுழி குறித்து நீதிமன்றத்தால் கோரப்பட்ட அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த அறிக்கை எதிர்வரும் மாதம் 31ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, அகழ்வுப்பணிகள் குறித்து ஆலோசனை வழங்கும் பேராசிரியர் ராஜ் சோமதேவ

19

Member of
David Pieris
Group of Companies

எசட்லைன்

• லீசிங்
• கடன்
• ஃபக்டரிங்
• வணிக நிதியிடல்
0114 700 100

# விகாரி வருட தமிழ்ப் புத்தாண்டு பொதுப் பலன்கள் 2019

**உதவும் மனப்பான்மை உள்ளவர்களே!**

உங்கள் ராசிக்கு 6ல் சந்திரனும் 3ல் சூரியனும் இருக்கும் வேளையில் தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால், கம்பீரமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். வழக்கு சாதகமாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை கூடும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த அயல்நாட்டுப் பயணம் சாதகமாக அமையும். வேலை தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும்.

சுக்கிரன் ராசியில் இருக்கும்போது வருடம் பிறப்பதால், அடிப்படை வசதிகள் பெருகும். கனிவான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். கடனாகக் கொடுத்த பணம் கைக்கு வரும். அநாவசிய செலவுகளைக் குறைப்பீர்கள். பிள்ளைகளை நல்ல வழிக்குக் கொண்டு வருவீர்கள்.

வருடம் முழுவதும் ராகு 5ல் தொடர்வதால், சில நேரங்களில் மன இறுக்கம் வந்து நீங்கும். உறவினர்களில் சிலர் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். அன்புத் தொல்லையும் அதிகரிக்கும். பிள்ளைகளிடம் முக்கியமான குடும்ப விஷயங்களைப் பகிர்ந்து கொள்வதில் தவறில்லை. மகளின் திருமணத்திற்காக வெளியில் கடன் வாங்க வேண்டி வரும். மகனின் உயர்கல்வி, உத்தியோகத்துக்காகச் சிலரின் சிபாரிசை நாடுவீர்கள்.

வருடம் முழுவதும் சனியும் கேதுவும் 11ல் அமர்ந்திருப்பதால், சிக்கல்களை புதிய கோணத்தில் அணுகி வெற்றி பெறுவீர்கள். வரவேண்டிய பணம் கைக்கு




வரும். வெளிவட்டாரத்தில் செல்வாக்குக் கூடும். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். பழைய கசப்பான சம்பவங்கள் அவ்வப்போது மனதை வாட்டும்.

14.4.19 முதல் 18.5.19 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு அதிசாரமாக லாப வீட்டில் வலுவாக இருப்பதால், திடீர் பண வரவு உண்டு. பெரிய பதவிகள் தேடி வரும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். தாழ்வுமனப்பான்மை நீங்கி நேர்மறை எண்ணங்கள் உருவாகும். பழைய கடனில் ஒரு பகுதியைத் தந்து முடிக்க வழி பிறக்கும்.

19.5.19 முதல் 27.10.19 வரை குருபகவான் 10ம் வீட்டில் தொடர்வதால், வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். சிறுசிறு அவமானங்களும் ஏற்படக் கூடும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சி செய்வார்கள். யாருக்கும் வாக்குறுதி தர வேண்டாம்.

28.10.19 முதல் 27.3.20 வரை குரு உங்கள் ராசிக்கு லாப வீட்டில் அமர்வதால் திடீர் யோகம், அதிர்ஷ்டம் உண்டாகும். சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். நல்லவர்களின் ஆலோசனையால் நீங்கள் புதிய பாதையில் செல்வீர்கள். கணவன்மனைவி இருவரும் மனம் விட்டுப் பேசுவீர்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

24.7.19 முதல் 16.8.19 வரை சுக்கிரன் 6ல் மறைவதால், வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை.

26.9.19 முதல் 11.11.19 வரை உள்ள காலகட்டத்தில் செவ்வாய் 8ல் மறைவதால் கட்டுக்கடங்காத செலவுகள் ஏற்பட்டபடி இருக்கும். ஆவணங்கள், பத்திரங்கள் தொலைந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.


மாணவர்கள் அதிகாலையில் எழுந்து படிப்பது நல்ல பலனைத் தரும். விரும்பும் பாடப்பிரிவில் சேர சிலரின் சிபாரிசை நாடவேண்டி வரும்.

வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்கும் திறன் அதிகரிக்கும். புதிய யுக்திகளைக் கையாண்டு லாபம் ஈட்டுவீர்கள். கார்த்திகை, தை, பங்குனி மாதங்களில் எதிர்பார்த்த ஒப்பந்தங்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும். ஆவணி, கார்த்திகை, பங்குனி மாதங்களில் புதிய வாய்ப்புகள் ஏற்படும். கலைத்துறையினர் கிடைக்கும் வாய்ப்புகளைத் தவறாமல் பயன்படுத்திக்கொள்வது அவசியம்.

இந்தப் புத்தாண்டு சின்னச் சின்ன இடையூறுகளை ஏற்படுத்தினாலும், மனதைப் பக்குவப்படுத்தி, வருட முடிவில் வசதிகளை ஏற்படுத்துவதாக அமையும்.

# கைரேகைப் பலன்கள்

பொதுவாக கைரேகை பலன் அறிய ஆண்களுக்கு வலக் கை ரேகையையும் பெண்களுக்கு இடக் கை ரேகையையும் பார்க்க வேண்டும் என கைரேகை நிபுணர்கள் கூறி வருகின்றனர் என்பது யாவரும் அறிந்ததே! ஆனால் எமது ஆய்வின்படி, இரண்டு கைகளின் ரேகையையும் பார்த்துத் தான் துல்லியமாக பதில் கூற முடியும். ஆண்களுக்கு இடக் கை ரேகையையைப் பார்த்து 40 வயதிற்கு முன்னால் நடந்த பலன்களையும், வலக் கை ரேகையையைப் பார்த்து 40 வயதிற்கு பிறகு நடக்கப்போகிற பலன்களையும் கூற வேண்டும். அதுபோல் பெண்களுக்கு வலக் கை ரேகையையைப் பார்த்து 40 வயதுக்கு முன்னால் நடந்த பலன்களையும், இடக் கை ரேகையையைப் பார்த்து 40 வயதிற்கு பிறகு நடக்கப் போகிற பலன்களையும் கூற வேண்டும்.




**விதி ரேகை:**

உள்ளங்கையில் மணிக்கட்டு பகுதியில் இருந்து ஒரு ரேகை சனி மேட்டை நோக்கிச் செல்லும். இதுவே விதி ரேகை (அ) தொழில் ரேகை என்று அழைக்கப்படும். இந்த ரேகை நமது உழைப்புக்குத் தகுந்த பலனைக் கொடுக்கக் கூடியது எனலாம். சிலர் கைகளில் இந்த ரேகையே இருக்காது! இவர்கள் எவ்வளவு தான் கஷ்டப்பட்டுப் பாடுபட்டாலும், அதற்குத் தகுந்த பலன் கிடைக்காது. விதி ரேகை தெளிவாக அமைந்து வெட்டுக்குறி, தீவு ஏதும் இல்லாது மணிக்கட்டிலிருந்து சனி மேடு வரை செல்வது நல்ல அமைப்பாகும். இவர்கள் வாழ்நாள் முழுவதும் தொழில் விஷயத்தில் பிரச்சினை ஏதும் இல்லாது நிம்மதியாக வாழ்வர். விதி ரேகையுடன் ஆயுள், புத்தி, இருதயரேகைகளும் நன்றாக அமைந்திருந்தால், இவர்களுக்கு நல்ல தேக ஆரோக்கியமும் , புத்திசாலித்தனமும் , நல்ல தொழில் விருத்தியும் ஏற்பட இடமுண்டு. இவர்களது எதிர்காலம் சந்தோசமாக அமையும்.

**ஆயுள் ரேகை:**

ரேகைகளில் மிகவும் முக்கியமானது ஆயுள் ரேகையாகும். முதலில் இதன் தன்மையைக் கவனிக்க வேண்டும். இந்த ரேகை சிலரது கைகளில் தடிமனாகவும், ஆழமாகவும் பதிந்திருக்கும். சிலரது கைகளில் லேசாகவும் மெல்லியதாகவும் பதிந்திருக்கும். தடிமனான ஆயுள் ரேகை மிருகபலத்தையும், மெல்லிய ஆயுள் ரேகை ஆத்ம பலத்தையும் குறிப்பிடும். தெளிவாகவும், மெல்லியதாகவும், நீளமாகவும் அமைந்த ஆயுள் ரேகை, ஒருவருக்கு நல்ல தேக பலத்தையும், ஆரோக்கியத்தையும் கொடுக்கும். தடிமனான ஆயுள் ரேகை உடையோர் அடிக்கடி சிறு, சிறு உடல் உபாதையால் சிரமப்படுவர். **அடுத்து, ஆயுள் ரேகை சுக்கிர மேட்டைச் சுற்றி எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆராய வேண்டும். ஆயுள்** ரேகை சுக்கிர மேட்டைச் சுற்றி நன்கு விலகியிருந்தால், இவர்களது தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். ஆயுள் ரேகை, சுக்கிர மேட்டைச் சுற்றி நெருங்கிக் காணப்பட்டால், இவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருக்கும் என்பதை இது குறிக்கும். ஆயுள் ரேகை குரு மேட்டுப் பக்கம் சற்று உயர்ந்து காணப்பட்டால், இவர்கள் தன்னடக்கம், கட்டுப்பாடு, லட்சிய உணர்வு, உயர்வெண்ணம் கொண்டவர்களாக இருப்பர். ஆயுள்ரேகை கீழ் செவ்வாய் மேட்டிலிருந்து ஆரம்பித்திருந்தால், இவர்கள் உணர்ச்சிவசப்படக்கூடியவர்களாகவும், அடக்கமில்லாதவர்களாகவும், சண்டை சச்சரவுகளில் ஈடுபடக்கூடியவர்களாகவும் இருப்பர். ஆயுள் ரேகையிலிருந்து மேல் நோக்கி எழும் ரேகைகள் சிறியதாக இருந்தால், இவர்கள் நல்ல உழைப்பு, உற்சாகம், அதிர்ஷ்டம் உடையவர்களாக இருப்பர் என்பதைக் காட்டும்.

**புத்தி ரேகை:**

குரு மேட்டின் அடிப்பகுதியில் ஆயுள் ரேகையை ஒட்டி ஆரம்பமாகி, உள்ளங்கையில் குறுக்காக செவ்வாய் மேடு (அ) சந்திர மேட்டை நோக்கிச் செல்லும் ரேகை புத்தி ரேகை என்று அழைக்கப்படும். இந்த ரேகை ஓரளவு அழுத்தமாகவும், தெளிவாகவும் , மெல்லியதாகவும் இருந்து தீவு, புள்ளி, உடைதல், போன்ற குறைபாடுகள் இல்லாது அமைவது நல்ல அமைப்பாகும். இவர்கள் புத்திசாலியாக்வும் , அதிக ஞாபக சக்தி உடையவர்களாகவும், நேர்மையாகவும் இருப்பர். புத்தி ரேகை நீளமாக அமைந்திருந்தால், இன்னும் விசேஷமான பலனைத் தரும். புத்தி ரேகை நமது மூளையின் அமைப்பையும், அது வேலை செய்யும் திறனையும், **நமது மனோநிலையையும் எடுத்துக் காட்டுகிறது! உள்ளங்**கையில் காணப்படும் முக்கியமான ரேகைகளில் இதுவும் ஒன்றாகும். இனி, புத்தி ரேகையின் பலவிதமான அமைப்புகளையும், அவை தரும் பலாபலன்களையும் பற்றி விரிவாகக் காண்போம்.

**ஆரோக்கிய ரேகை:**

ஆரோக்கிய ரேகையைப் புதன் ரேகை என்று கூறுவது உண்டு. இது விதி ரேகையின் அருகே ஆரம்பித்து புதன் மேடு வரை செல்லும். ஒருவரது உடல் நிலை எவ்வாறு உள்ளது என்பதை இந்த ரேகை எடுத்துக் காட்டும். உள்ளங்கையில் உள்ள மற்ற ரேகைகளான புத்திரேகை, ஆயுள் ரேகை, இருதய ரேகை ஆகியவற்றில் ஏதாவது குறைபாடு இருந்தாலும், இந்தப் புதன் ரேகை நன்றாக அமைந்திருந்தால், இவர்களது தேகத்தில் ஏதாவது பீடைகள் வந்தாலும், அவையெல்லாம் உடனடியாக நிவர்த்தியாவதற்கு இது உறுதுணையாக இருக்கும். மேலும், புதன் மேடு பலவீனமாக இருக்க, இந்த ரேகை பலமாக இருந்தால் புதன் மேட்டால் ஏற்படும் குறைபாடுகள் யாவும் விலகி விடும். இந்த ரேகை தெளிவாகவும், மெல்லியதாகவும், ஓரளவு அழுத்தமாகவும் இருப்பது நல்லது. தீவு, பிளவு, வெட்டுக்குறி, சங்கிலிக் குறி போன்ற குறைபாடுகள் ஏதும் இல்லாது இந்த ரேகை அமைந்திந்தால் இவர்கள் நல்ல பேச்சு சாதுர்யம், சொல்வன்மை கலை னம், வியாபரத்திறமை ஆகியவற்றுடன் பெரும் பணம் சம்பாதித்து சிறப்பாக வாழ்வர்.

**இருதய ரேகை:**

உள்ளங்கையில் காணப்படும் முக்கியமான ரேகைகளில் இதுவும் ஒன்றாகும். இந்த ரேகை புதன் மேட்டில் உற்பத்தியாகிச் சூரிய மேடுகளைத் தாண்டி குரு மேட்டில் முடியும். சிலருக்கு இந்த இருதய ரேகை சனி மேட்டில் முடியும்.

கிரக மேடுகளுக்கு வெகுவாக கீழே தள்ளிப் புத்திரேகையை ஒட்டியும் முடியலாம். சிலர் கைகளில் புத்தி ரேகை, இருதய ரேகை ஆகிய இரண்டும் சேர்ந்து, உள்ளங்கையில் குறுக்கே ஒரே ரேகையாகவும் காணப்படலாம். இந்த இருதய ரேகை மூலம் நமது இருதயம் எவ்வாறு வேலை செய்கிறது என்பதையும், இருதயத் துடிப்பு இரத்த ஓட்டம் போன்றவற்றையும் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் இருதயத்தில் ஏற்படக் கூடிய கோளாறுகளையும் தெரிந்து கொள்ளலாம். மேலும், இந்த ரேகை மூலம் அன்பு, பாசம், தயை, காருண்யம், காதல் போன்ற உணர்வுகள் எந்த அளவில் உள்ளன என்**பதையும் தெரிந்து கொள்ளலாம்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 15 . 02 . 1949

இறப்பு 06 . 05 . 2019

### திருமதி கமலாதேவி சுந்தரலிங்கம்

சாயுடை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் மகாதனை தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சுந்தரலிங்கம் 06.05.2019 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கெங்காதேவி, தங்கராசா, சரஸ்வதிதேவி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பரிபூரணஅம்மாள், காலஞ்சென்ற சண்முகலிங்கம், புவனேஸ்வரி, பரமேஸ்வரி, சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் தமிழ்ச்செல்வி (ஆசிரியர் யா/யூனியன் கல்லூரி), கலங்கரைச்செல்வி(லண்டன்), கலைச்செல்வி(லண்டன்), சங்கரலிங்கம் (இலங்கை), கணேசலிங்கம் (ஆஸ்திரேலியா), கல்பனா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயகுமாரன் (இலங்கை), யோகசிவபாலன் (லண்டன்), சுதர்சினி (இலங்கை), சுகனியா (ஆஸ்திரேலியா), உமாபரன்(நியூசிலாந்து) ஆகியோரின் மாமியாரும் நஜனிதா, ரிஷிகேசவன், தபனியா, டிரோஷன், ஆருஷன், கிரிஷன், கிசானா, கர்ஷன், சகிஷன், யோகிஷா, யோகிஷன், ஆதனா, அமிட்னா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கட்டுப்பிட்டி இந்துமயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மகாதனை,**
**துர்க்காபுரம், தெல்லிப்பழை.**

(CS 25205)(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## பெண் வேலையாள்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை. வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை. வேலைநேரம் காலை 7.30 தொடக்கம் மாலை 5.30 வரை

**தொடர்பு - 076 118 4010**

## வீட்டுப்பணிப்பெண் தேவை

வீட்டுப்பணிப்பெண் ஒருவர் உடனடியாக தேவை சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

**078 283 2289, 077 642 9299**

## காணவில்லை

பொமேரியன் செம்மஞ்சள் நிறம் உடைய நாய் உதயசூரியன் வீதி, உடுவில் வீதியில் தொலைந்து விட்டது. கண்டுபிடித்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.



**077 077 3328**

## 6ஆவது நினைவஞ்சலியும் 79ஆவது பிறந்ததினமும்



மண்ணில் 15.04.1940

விண்ணில் 15.04.2013

திதி : சித்திரை மாத பூர்வபக்க பஞ்சமி (09.05.2019)

### இராமலிங்கம் கந்தையா

(ஓய்வு நிலை தபால் அதிபர்)


எங்கள் ஆருயிர் அப்பா
நீங்கள் எங்களை விட்டு
பிரிந்து ஆறு வருடங்கள் கழிந்தாலும்
அன்று போல் இன்றும்
எம்மனதில் இருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
மாவடியானை பிரார்த்திக்கின்றோம்.

**குறிப்பு:** அன்னாரின் நினைவாக இன்று (09.05.2019) வியாழக்கிழமை மீசாலை மாவடிப்பிள்ளையார் ஆலயத்தில் அன்னதானம் நடைபெறும். யாவரையும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

**"மணியகம்"**
**ஐயா கடையடி, சாவகச்சேரி.**

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 03 . 04 . 1934

இறப்பு 07 . 05 . 2019

### வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் கடந்த (07.05.2019) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் புனிதவதியின் அன்புக்கணவரும் செல்வகுமார் (லண்டன்), திருவருட்செல்வி (பிரான்ஸ்), காலஞ்சென்ற திலகவதி, மஞ்சுளா (நீர்வேலி), கிருஷ்ணகுமார் (சிறுப்பிட்டி) ஆகியோரின் அன்புத்தந்தையும் தட்சிணாமூர்த்தி, புவனேஸ்வரி, மணிமேகலை மற்றும் காலஞ்சென்றவர்களான திருப்பரஞ்சோதி , பூபாலசிங்கம், சின்னத்தம்பி, அசலாம்பிகை, நகுலாம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற சின்னத்தங்கம் மற்றும் அருளானந்தம், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மைதிலி (லண்டன்), சுதாகரன் (பிரான்ஸ்), அஞ்சலோரவீன் (நீர்வேலி), மயூரா(பிரான்ஸ்), நிசாந்தினி (சிறுப்பிட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கீர்த்தன், கிந்துசன், மிதுசா, மிதுசன், கீர்த்தனா, தீபனா, அனோஜன், அயேதன், அயிந், அஷ்விதா, வவுஷா, சபீனியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**நீர்வேலி மேற்கு, நீர்வேலி**

**077 839 8695, 077 662 3777**

## மரண அறிவித்தல்



### கந்தையா மயில்வாகனம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் 93/13, இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மயில்வாகனம் கடந்த (07.05.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதி (தேவி) யின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - லட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, சுந்தரம், சின்னம்மா தம்பையா மற்றும் இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தெய்வானை, சுப்பிரமணியம், கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் ராம்குமார் (ஜேர்மனி), ரமணகுமாரி (ஜேர்மனி), றோகினி (வதனா - ஜேர்மனி), உதயகுமாரி (லண்டன்), சுரேஸ்குமார் (கனடா), நிறஞ்சினிதேவி (ரம்யா), சதீஸ்குமார் (பிரான்ஸ்), பிறேம்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கௌரி (ஜேர்மனி), சிவகுமார் (ஜேர்மனி), சிவானந்தராசா (ஜேர்மனி), சுரேந்திரன் (லண்டன்), ராஜினி (கனடா), கிருபாகரன், தர்சினி, சுகன்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் சதுர்ஷன் (ஜேர்மனி), கபிக் ஷனா (ஜேர்மனி), கபிநயா (ஜேர்மனி), அவனிஸ் (ஜேர்மனி), யானுஷா (ஜேர்மனி), அனோயன் (ஜேர்மனி), சதுர்ஷா (ஜேர்மனி), விசாகன் (லண்டன்), வாகீசன் (லண்டன்), சாரங்கா (லண்டன்), அபிராமி (லண்டன்), அஜய் (கனடா), அபிஷா (கனடா), கபிஷிஹா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சதீஸ்குமார் (பிரான்ஸ்) 33 769 216 827,**
**சிவானந்தராசா 0049 89 55 26 4209 (ஜேர்மனி),**
**கிருபா 077 403 5493 (இலங்கை),**
**ரம்யா 077 600 5544 (இலங்கை).**

(CS 25213/15/17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 09.04.2019 செவ்வாய்க்கிழமை
சிவபதம் அடைந்த எமது அன்புத் தாயார்

## அமரர் கந்தவனம் சிவபாக்கியம்

தோற்றம்
24.06.1924

மறைவு
09.04.2019

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.05.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.310, குட்செட் வீதி,**
**முதலாம் ஒழுங்கை, தோணிக்கல், வவுனியா.**

**குடும்பத்தினர்.**

## பட்டா வாகனம் வாடகைக்கு தேவை

கிளிநொச்சியில் பிரபல்யமான குளிர்பான நிலையமொன்றிற்கு மாத வாடகைக்கு பட்டா வாகனம் தேவைப்படுகிறது.

**077 159 0571**

## அறைகள் வாடகைக்கு

வெள்ளவத்தையில் குறைந்த விலையில் அறைகள்
நாள் வாடகைக்கு 800 -2700 வரை
Attach Bathroom. Hotel Villa.
422/1,காலி வீதி, கொழும்பு - 06, செட் அருகில்

**077 796 7878**

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**அருளப்பு பிரான்சிஸ் சேவியர்** (யோகம்)

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள்
பாக்கியவான்கள்
(வெளி 14:13)

இமைகள் மூடித்திறப்பதற்குள்
வருடம் ஒன்றாகிவிட்டது
நாம் வாழும்நாள்களில்
உம் நினைவுகள் எம்முடன்
என்றென்றும் வாழும்......

*உங்கள் பிரிவால் துயருறும்*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
62 /1, டேவிற் றோட்,
குருநகர், யாழ்ப்பாணம்.

மண்ணில்
19.08.1945

விண்ணில்
09.05.2018

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# வாடகைக்கு வீடுகள்/கட்டடங்கள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு விடுதி வசதி வழங்குவதற்காக பின்வரும் வேண்டுதல்களை நிறைவு செய்யக்கூடிய பெரிய, நடுத்தர வீடுகள்/கட்டடங்கள் யாழ் பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதிகளில் வாடகைக்கு தேவை.

1. விருந்தினர் விடுதிக்கான வீடு/கட்டடம்

| அறைகள் | குளியல் அறைகள் | வேண்டப்படும் தகைமைகள் |
|---|---|---|
| 10 – 15 இருத்தல் வேண்டும் | இணைந்த குளியல் அறைகள் (15) விரும்பத்தக்கது<br>அல்லது<br>குறைந்தது இணைந்த குளியல் அறைகள் 05 உம் பொதுவான குளியல் அறைகள் 03 உம் உடையதாக இருத்தல் வேண்டும். | • எல்லா அறைகளும் குளிரூட்டப்பட்டதாக இருத்தல் விரும்பத்தக்கது.<br>• முழுமையாக மாபிள் பதித்த வீடாக இருத்தல் வேண்டும்.<br>• புதிதாக வர்ணம் பூசப்பட்டு அழகாக இருத்தல் வேண்டும்.<br>• வாகன தரிப்பிட வசதி போதுமானதாக இருத்தல் வேண்டும்.<br>• பல்கனி வசதி உடையதாக இருத்தல் விரும்பத் தக்கது.<br>• சாரதிகளுக்கான ஓய்வறை உடையதாக இருத்தல் வேண்டும்.<br>• விருந்தினர் விடுதி பாதுகாவலருக்கான ஓய்வறை உடையதாக இருத்தல் வேண்டும். |

2. அலுவலர் விடுதிக்கான வீடு/கட்டடம்

| அறைகள் | குளியல் அறைகள் | வேண்டப்படும் தகைமைகள் |
|---|---|---|
| குறைந்தது 05 அறைகளாவது இருத்தல் வேண்டும் | இணைந்த குளியல் அறைகள் விரும்பத்தக்கது<br>அல்லது<br>குறைந்தது இணைந்த குளியல் அறைகள் 03 உம் பொதுவான குளியல் அறைகள் 02 உம் உடையதாக இருத்தல் வேண்டும். | • வீடு வர்ணம் பூசப்பட்டு அழகாக இருத்தல் வேண்டும்.<br>• அறைகள் காற்றோட்டமுள்ளதாக இருத்தல் வேண்டும்.<br>• காணி ஓரளவு விசாலமானதாக இருத்தல் வேண்டும். |

வீட்டை/கட்டடத்தை வாடகைக்குத்தர விரும்புவோர் கீழ்வரும் மாதிரிப்படிவத்தில் தயார் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 22.05.2019 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் பிரதிப் பதிவாளர்/பொது நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் "யாழ். பல்கலைக்கழக **விருந்தினர்களுக்கான வீடு** அல்லது **அலுவலர்களுக்கான வீடு**" என தனித்தனியாக குறிப்பிடப்பட வேண்டும். பல்கலைக் கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

* தொடர்புகளுக்கான தொலைபேசி இல: 021 222 6517
பதிவாளர்.

பிரதிப் பதிவாளர்/பொது நிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்.

**யாழ். பல்கலைக்கழகத்தின் விருந்தினர்/அலுவலர்களின் உபயோகங்களிற்கான வீடு/கட்டடம்**

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள் ......... ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை/கட்டடத்தை பல்கலைக்கழகத்திற்கு வாடகைக்குத்தர விரும்புகின்றேன்.

**வீடு/கட்டடம் பற்றிய விவரங்கள்**

1) வீடு அமைந்திருக்கும் இடம்
..........................................................................................
..........................................................................................

2) வீட்டு சொந்தக்காரரின் பெயரும் அவரது நிரந்தர முகவரியும்
..........................................................................................
..........................................................................................

3) தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கமும்
பெயர்:..........................................................................
முகவரி: ........................................................................
..........................................................................
தொலைபேசி இல: ..............................................................

4) (a) வீட்டின் பரப்பளவு (சதுர அடி) ........................................
(b) வீடு அமைந்துள்ள காணியின் பரப்பளவு ...............................

5) அறைகளின் எண்ணிக்கை:


| விபரம் | AC உடன் | AC அற்றது |
|---|---|---|
| இணைந்த குளியல் அறைகளுடன் அறைகளின் எண்ணிக்கை | | |
| இணைந்த குளியல் அறைகள் அற்ற அறைகளின் எண்ணிக்கை | | |

6) மலசல கூடங்களின் எண்ணிக்கை ..............................................
7) மின்சார வசதி உண்டு/இல்லை ................................................
விவரம் ..........................................................................
8) தண்ணீர் வசதி: கிணறு/குழாய் நீர்
விவரம் ..........................................................................
9) எதிர்பார்க்கும் குத்தகை/மாதாந்த வாடகை ...................................
10) குத்தகைக்கு தரக்கூடிய கால அளவு .........................................
11) வேறு யாதாயினும் கட்டுப்பாடுகள்/நிபந்தனைகள் (இருப்பின்) ...................
..........................................................................

திகதி ..................

.......................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24.08.1950

மறைவு
09.05.2017

அமரர்
## கஸ்பார் மரியறோஸ் தங்கராசா

அன்பினால் அமுதூட்டி
ஆளுமையால் எமை நிறைத்த
எமதருமை தந்தையே!
இரண்டென்ன, ஈராயிரம் ஆண்டானாலும்
அணையாது உங்கள் நினைவுகள்

தாளையடி வடக்கு, தாளையடி.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03 . 12 . 1954

மறைவு
26 . 04 . 2012

அமரர்
## அப்பையா சிவலிங்கம் (சந்திரன்)

திதி: பஞ்சமி

நேசத்துடனும் அன்பு பாசத்துடனும்
ஒரு கூட்டுக் கிளியாக
எமை வளர்த்து ஆளாக்கி
நேர்வழியில் வாழவைத்த
எம் குடும்ப சூரியன்
எம் அன்புத் தெய்வத்தை
எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகிறோம்.



**93/9, இராசாவின் தோட்டம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

# மாவட்டச் செயலகம்,கிளிநொச்சி
# குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக்கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை | வேண்டப்படும் ICTADதரம்/ பதிவு | கேள்விப் பிணைப்பணம் செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/DPS/DO 12/ND/359-1 | அம்மாச்சி உணவகம் நிர்மாணம் கட்டம் I - அறிவியல்நகர், கிளிநொச்சி | 13.729 மில்லியன் (வரி நீங்கலாக) | C6 and C5 Building | ரூபா 137,500.00 வங்கிப் பிணை 05.09.2019வரை | 3,500.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.
   II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
   III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (I) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
   IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285663.பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 09.05.2019 ஆம் திகதியிலிருந்து 22.05.2019 ஆம் திகதிவரை முற்பகல் 9.00மணி முதல் பிற்பகல் 3.00மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.
4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி. பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும். கேள்வி கோருவோரின் முன் தக்திக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம். திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "KN/……………………" என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர். திணைக்கள பெறுகைக் குழு. மாவட்டச் செயலகம். கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 23.05.2019 ஆம் திகதி பிற்பகல் 02.00மணிக்குமுன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
7. கேள்வி கோரலுக்கு முன்னரான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) 20.05.2019 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**சுந்தரம் அருமைநாயகம்,**
**திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,**
**அரசாங்க அதிபர் /மாவட்டச் செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் போட்டோ பிரதி சேவையை மேற்கொள்வதற்கான கேள்விப் பத்திரம் கோரல்

யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் போட்டோ பிரதி சேவையை ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நடத்துவதற்கு பொருத்தமான தனி நபர்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பல்கலைக்கழக நூலகத்தில் மாணவர்களின் தினசரி விரிவுரைக் குறிப்புகள், பல்கலைக்கழக நூலகத்திலுள்ள நிரந்தர உசாத்துணை நூல்கள் என்பவற்றை நிழற்பிரதி செய்வதற்கு இச்சேவையைப் பொறுப்பேற்பவர் தயாராக இருக்க வேண்டும்.

இச்சேவையைப் பொறுப்பேற்பவர் மாதவாடகையாக ரூபா 1,000/- இனை மாதாந்தம் பல்கலைக் கழகத்திற்குச் செலுத்துவதுடன் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திடுதல் வேண்டும்.

விரும்பிய விண்ணப்பதாரர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/- இனை பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் அல்லது நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயரில் யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கியின் கணக்கிலக்கம் **162-1-001-6-0000880** இற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் செலுத்தி பெற்ற பற்றுச் சீட்டை 23.05.2019 மதியம் 12.00 மணிக்கு முன்னர் பிரதிப் பதிவாளர், நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களை 24.05. 2019 பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் பத்திரங்களை இடலாம். **கடித உறையின் இடது மேல் மூலையில் "பல்கலைக்கழக நூலகத்தில் போட்டோ பிரதி சேவை வழங்கல்"** என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும் கேள்விப்பத்திர விவரம் மற்றும் நிபந்தனை விபரங்களை பொது நிர்வாகக் கிளையில் பிரதிப்பதி வாளரிடம் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்

கேள்விப்பத்திரங்கள் 24.05.2019 பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடத்திற்கு சமுகமளிக்கலாம்.

**பதிவாளர்.**


P.P.T
EXPRESS
இரவு பகல் சேவை



பருத்தித்துறை - 7:00 A.M
யாழ்ப்பாணம் - 8:00 A.M
வெள்ளவத்தை - 7:00 A.M
கொட்டாஞ்சேனை - 8:00 A.M

Colombo - Jaffna Buss Services
International Parcel Service
HOTLINE Colombo - 077 575 5175, 076 440 8951 Jaffna - 077 573 1318, 076 440 8947

# சிலந்தியிடம் பாடம் கற்ற அரசன்



போரில் தோல்வி அடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி ஒளிந்தான். அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனின் படை மிகவும் சிறியதாக இருந்ததினால் அவனால் வெல்ல முடியவில்லை. எதிரியிடம் மாபெரும் படை இருந்ததினால் அது வென்றது.

தோல்வியுற்ற அரசனை கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளையிட்டான் . அதனால் அவன் காட்டுக்கு ஓடிச் சென்று அங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.

தோல்வி கண்ட அரசன் மிகவும் மனவருத்தம் கொண்டான். மனச்சோர்வினால் துணிவு இழந்தான். ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது.

அந்த சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும் போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது.

இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கடைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது.

அரசன் "இந்தச் சிறு சிலந்தியே பல முறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விட வேண்டும்?நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும்" என்று எண்ணினான் மறுபடியம் தன் எதிரியுடன் போர் புரிய தீர்மானித்தான்.

அரசன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தன் நம்பிக்கையான ஆள்களைச் சந்தித்தான்.

தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தன் அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்த சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3181 திகதி:2019.05.08 புதன்கிழமை
ஊதா
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 36 43 52 64 B
போனஸ் இலக்கம் 51
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் 41,854,045/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 604
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.05.08
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,655,585/-
வெற்றி இலக்கங்கள் 05 14 25 75
ஆங்கில எழுத்து U
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

கோடிபதி ஷனிதா
சீட்டிழுப்பு வாரம்: 440 சீட்டிழுப்பு திகதி 2019.05.07
வர்ணம்: இளஞ்சிவப்பு செவ்வாய்க்கிழமை
J 06 08 33 69
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 123,566,333/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
2019.05.10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 5 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 08.05.2019 வெற்றி வாரம் 2513 வர்ணம் பச்சை
கன்னி
வெற்றி இலக்கங்கள் 11 24 43 61
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 28,90,088 /=
09.05.2019 ம் திகதி வியாழக் கிழமை மண்ணிற நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 243
சீட்டிழுப்பு திகதி 08.05.2019 நீலம்
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 45 47 68
விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 16, 610, 788/=
11.05.2019 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## முஸ்லிம்களிடம்...

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்பு அமைச்சு அரச தலைவரின் பொறுப்பாக்கத்தின் கீழ் காணப்பட்டாலும், பாதுகாப்புசார் நடவடிக்கைகள் அனைத்தும் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவின் வழிநடத்தின் பிரகாரமே இடம்பெற்றுள்ளன. பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஐக்கிய தேசியக் கட்சியின் விருப்பத்துக்கமைய செயற்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் உள்ள முஸ்லிம் மக்களிடம் இருந்து பெருமளவில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. கடந்த மாதம் 21ஆம் திகதி தற்கொலை குண்டுத்தாரிகளினால் நடத்தப்பட்ட பின்னணியினை சாதாரண மக்களும் அறிந்திருக்க வேண்டும். தாக்குதலை தொடர்ந்து முஸ்லிம் சிங்கள இனத்தவரிடையில் இனகலவரம் ஏற்படும் என்பது முன்கூட்டியே யூகிக்கப்பட்டுள்ளது. பலர் தமது பாதுகாப்பினையும், தாக்குதலைத் தீவிரப்படுத்தவுமே இவ்வாறான ஆயுதங்களை தம்வசம் வைத்துள்ளார்கள். முறையான திட்டமிடலுக்கு அமையவே கடந்த மாதம் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இனக்கலவரம் ஏற்படுவற்கான சூழ்நிலைகள் முறையான வழிநடத்தலுக்கு அமைய தவிர்க்கப்பட்டுள்ளன - என்றார். (ம-31)

## நன்கு...

தகவல் கசிந்துள்ளது.

இவர்கள், உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களின் சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசிமின் நெருங்கிய உதவியாளர்களாவர். சஹ்ரானின் சகோதரர்களில் ஒருவரே, இவர்களை அம்பாந்தோட்டைக்கு அழைத்து வந்துள்ளார். இவர்களுக்கு ஆயுதங்களைக் கையாளும் பயிற்சி நீண்ட நாள்களாக அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு, மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் குண்டுத் தாக்குதலை நடத்திய மொகமட் நசார் மொகமட் ஆசாத் பயிற்சிகளை வழங்கி வந்துள்ளார். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிய வந்துள்ளது. (ம)

## தேர்தலுக்கான...

யில் தேர்தலுக்கு செல்ல வேண்டிய தேவை என்ன என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கேள்வியெழுப்பினார்.

நாட்டில் தற்போதைய நிலவரம் குறித்து நாடாளுமன்றில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டின் அரசியல்வாதிகள் அனைவரும் தோல்வியடைந்துள்ளனர். 70 வருடங்களாக அரசியல்வாதிகளே இந்த நாட்டைச் சீரழித்துள்ளனர். தற்போது எல்லோரும் தேர்தலைப்பற்றி பேச ஆரம்பித்துள்ளனர். நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் தேர்தலை நடத்த முடியுமா? என்று நான் அவர்களிடம் கேட்க விரும்புகின்றேன்.

தற்போது தேர்தலை நடத்துவதற்கான தேவை தான் என்ன? அரச தலைவர் தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்களே காணப்படுகின்றன. இந்த ஆறு மாத காலத்துக்குள் அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைக்கான தீர்வினைக் கண்டதன் பின்னர் தாரளமாகத் தேர்தலுக்குச் செல்ல முடியும். அரச தலைவர் தேர்தலுக்கும் செல்ல முடியும்.

நாட்டிலுள்ள வயதான அரசியல் தலைவர்கள் ஓய்வு பெற வேண்டிய நேரம் வந்துள்ளது. நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்த குண்டு தாக்குதல்களால் ஏற்பட்ட துயரத்திலிருந்து மக்கள் இன்னும் மீண்டு வரவில்லை. இது போன்றதொரு சந்தர்ப்பத்தில் தேர்தலைப்பற்றி பேசிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறானவர்கள் நாடாளுமன்றத்தில் இருப்பதனாலேயே இது போன்றதொருபாரிய அழிவுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்தோடு இந்த சந்தர்ப்பத்தில் எவ்வாறு மக்களிடம் சென்று வாக்கு கேட்பது, எவ்வாறு தேர்தல் பரப்புரைகளை முன்னெடுப்பது என்பது எமது கேள்வியாகும். அவ்வாறு அவசரமாக தேர்தலை நடத்த வேண்டிய தேவையும்கிடையாது என்பதே எமது நிலைப்பாடாகும் - என்றார். (ம-61)

**விற்பனைக்கு**

புடைவை கடை பான்சி கடைக்குரிய மரத்திலான அலுமினிய அலுமாரிகள் சோக்கேஸ் விற்பனைக்குண்டு. -077 617 0750

**பெயர் மாற்றம்**

நாகேந்திரம் ஜெகதீஸ்வரன் ஆகிய நான் 07.05.2019 ஆம் நாள் முதல் எனது பெயரை நா. ஜெகதீஸ்வர குருக்கள் என பெயர் மாற்றம் செய்கின்றேன்.

**தவறிவிட்டது**

நாவலடி இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைச்சேர்ந்த தவராசா சோதிமலர் என்பவரது ஆவணங்கள் அடங்கியபை பருத்தித்துறை - யாழ்ப்பாணம் (751) மினிவானில் தவறிவிட்டது. தயவுசெய்து அதனைக்கண்டெடுத்தவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

077 308 1875, 077 593 5037

**துயர் பகிர்வு**

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியையான **திருமதி கவிதா வாமதேவன்** அவர்களின் தந்தையார்

**இரா. சந்திரசேகரசர்மா** அவர்கள்

கடந்த (01.05.2019) புதன்கிழமை இறைபதமடைந்தார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்/கல்வி வலய இசையாசிரியர் கழகம்**

**கண்ணீர் அஞ்சலி**

யாழ்ப்பாண மாவட்டச் செயலக நிர்வாக கிளையில் சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி கிரிசாந்தி விக்னேஸ்வரன்** அவர்களின் அன்புத்தந்தை

**செல்வநாயகம் கமலநாதன்**

அவர்கள் கடந்த 05.05.2019 ஆம் திகதி இறைப்தம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம்**





# இராவண கோட்டத்தில் சாந்தனு ஜோடியான ஆனந்தி

'மதயானை கூட்டம்' படத்தை இயக்கிய விக்ரம் சுகுமாறன், சுமார் 6 ஆண்டுகளுக்கு பிறகு 'இராவண கோட்டம்' என்ற படத்தை இயக்கவிருக்கிறார். சாந்தனு நாயகனாக நடிக்கும் இந்த படத்தை கண்ணன் ரவி தயாரிக்கிறார்.

இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு சமீபத்தில் வெளியான நிலையில், இந்த படத்தில் சாந்தனு ஜோடியாக நடிக்க கயல் ஆனந்தி ஒப்பந்தமாகி இருக்கிறார். ஆனந்தி நடிப்பில் கடைசியாக வெளியான 'பரியேறும் பெருமாள்' படத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது டன். அவரது நடிப்பிற்கும் பாராட்டுக்கள் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

முற்றிலும் வித்தியாசமான கதைக்களத்துடன் உருவாகும் இந்த படத்திற்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைக்கிறார்.







## இது புதுசு

சிறுவர்களுக்கு 'ஐஸ் சொக்' தயாரிப்பதற்கான உபகரணம் அறிமுகமாகியுள்ளது. இது 650 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.







ஜோக்கர்... ItsJokker

நல்லா இஷ்டத்துக்கு சாப்பிடுறப்ப கூட இவ்ளோ செலவு ஆகலை.
இந்த "டயட் பாலோவ் பண்ணி உடம்பை குறைக்க அவ்ளோ செலவாகுது..!!!

## தலைவன் பொருந்தாத போட்டோவே இருக்காது போல...



## f சோதனை

சில பாவிகள் கொல்லத்துணிந்தார்கள்..
சில அப்பாவிகள் குருதி சிந்தினார்கள்..
குருதி சிந்திய உறவுகளுக்காய்
நானும் இங்கே வருந்தி நிற்கிறேன்;
மனம் நொறுங்கி கண்ணீரும் சிந்துகிறேன்..

அது போதவில்லை
போலும்..

நான் சத்தியம் செய்கிறேன்;
என் கண்ணீரில் பொய்யில்லையென..
என் கரங்களை விரித்து காட்டுகிறேன்;
அவற்றில் ஆயுதங்களெதுவும் இல்லையென..
என் கைப்பையை திறந்து காட்டுகிறேன்;
அதில் வெடிகுண்டுகளெதையும்
நான் சுமந்து வரவில்லையென..

அவர்கள் இன்னும்
முன்னேறி வருகிறார்கள்..

இப்போது நான் என் முகத்திரையை
விலக்கிக்காட்ட வேண்டியிருக்கிறது..
என் கறுப்பு அங்கியில் குருதிக்கறை
எதுவுமில்லையென
தலை கவிழ்ந்து மண்டியிட வேண்டியிருக்கிறது..



எனதருமை கிறிஸ்துவின் மைந்தர்களே!!
நீங்களோ ஒருமுறைதான் இறந்தீர்கள்;
இங்கிருக்கும் முஸ்லிம்களோ
இனி வரும் ஒவ்வொரு நாளும்
தங்களை நிரூபித்து நிரூபித்தேயல்லவா
இறக்க நேரிடும்..

அந்தோ அவர்கள் கண்களை உறுத்தும் கறுப்பு அங்கியை
குற்றம் சொல்லியாயிற்று..
வன்முறைக்குதவும் முகத்திரையென
தடையும் விதித்தாயிற்று..

இனி இங்கே வன்முறைகள் நிகழாது..
தற்கொலை குண்டுகள் வெடிக்காது..
தீவிரவாதம் பரவாது..

நல்லது அவர்கள் எண்ணம் போலவே
தேசமெங்கும் பரவட்டும் சாந்தியும் சமாதானமும்!!!

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## எய்தவன் இருக்க அம்பை நோகக்கூடாது!

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு வெடிப்புகள் மற்றும் படுகொலைகளைத்தொடர்ந்து ஏற்பட்ட சூழ்நிலைகளைக்கருத்தில் கொண்டு வடக்கு மாகாணத்தில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நடைபெற்ற சம்பவங்களில்இருந்துபாதிக்கப்பட்டவர்கள்மீண்டெழுவதற்காகவும் இனிவரும்காலங்களில்இத்தகையசம்பவங்கள்இடம்பெறாமல் தடுப்பதற்காகவும் இந்த நடவடிக்கை எடுக்கப்படப் போவதாக அந்த அறிவிப்புக் கூறுகின்றது. வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன்ராகவன், வடக்குமாகாணதலைமைச்செயலர்பத்திநாதன் ஆகியோர் கையெழுத்திட்டு இந்த அறிவிப்பு விடப்பட்டிருக்கின்றது.

"சில சட்டவிரோத சமய, கலாசார, வியாபாரச் சின்னங்களும் சமயப்பொருள்களும்எந்தவிதஅனுமதியையும்பெற்றுக்கொள்ளாமல் வடமாகாணத்தின் அரச, பொது இடங்களில் நிறுவப்படுவது உடன்நிறுத்தப்படவேண்டும் என்பதை அதிகாரிகள், சமூக, சமயத்தலைவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோர் வலியுறுத்தி வருகின்ற நிலையில் அவ்வாறாக நிறுவப்பட்டுள்ளவை, குறித்த கால இடை வெளியில் பொருத்தமான இடங்களுக்கு மாற்றப்படுவதற்கு அறிவுறுத்தப்படுவதுடன் தவறின் உரிய நிறுவனங்களால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட நேரிடும் என்பதையும் இத் தருணத்தில் சுட்டிக்காட்ட முற்படுகின்றோம்" என்று அந்த அறிவிப்புக்கூறுகின்றது.

அரச, பொது இடங்களில் சட்டத்துக்குப் புறம்பாக, விதிகளுக்கு மாறாக அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் எவையாயினும் அவை அகற்றப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அவ்வாறு நிறுவப் படுபவைகளால் முரண்பாடுகளும் சிக்கல்களும் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

அதற்காக, இந்தப்பிரச்சினையை மேலெழுந்தவாரியாக அணுக முடியாது என்பதையும் உரிய தரப்பினருக்கு சுட்டிக்காட்டுவது முக்கியமானது.

அரசன்எவ்வழியோகுடிகள்அவ்வழிஎன்பது முதுமொழி. இந்த விடயத்திலும் அதுவேதான் நடந்தது, நடந்து வருகின்றது. போருக்குப் பின்னரான காலத்தில் அரச பொது இடங்களில் மட்டுமல்லாது தனியார் காணிகளிலும்கூட அடாத்தாக விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தகைய விகாரைகளுக்கு அரச நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அரச தலைவர்கள் வந்து அவற்றைத் திறந்து வைத்திருக்கிறார்கள், அரச அதிகாரிகள் அத்தகைய அத்துமீறிய இடங்களின் செயற்பாடுகளுக்கு வக்காலத்து வாங்குகின்றார்கள்.

இப்படிஅரசேசட்டத்துக்குமாறானவற்றைஊக்குவிக்கும்வகையில் நடக்கும்போது குடிமக்கள் வீதியோரங்களில் சிவலிங்கம் வைப்பதும் மாதா சொரூபம் கட்டுவதும் புதிய விடயமல்லவே. ஆட்சித்தரப்புகளேசட்டத்தைமதிக்காதபோதுமக்களைமட்டும் அதனை மதிக்கக் கோருவதில் அர்த்தமில்லை.

வலி. தென்மேற்குப் பிரதேசசபைக்குட்பட்ட சம்பில்துறையில் அமைந்துள்ள பெரும் விகாரையும் அதனோடிணைந்த கட்டுமானங்களும் உள்ளூர் அதிகார சபையிடம் இருந்து எந்தவித அரச அனுமதிகளும் பெறாமலேயே கட்டப்பட்டுள்ளன. அரச படையினரே இந்த வழிபாட்டிடத்தைத் தொடர்ந்து பராமரித்து வருகின்றனர்.

சம்பில் துறை முதல் முல்லைத்தீவு எல்லையிலுள்ள நீராவிப்பிட்டி வரையில்இதுபோன்றபலகதைகள்உள்ளன. அரசபொதுக்காணிகளிலும்தனியார்காணிகளிலும்அனுமதியற்றவிகாரைகள் இப்படியேகட்டப்பட்டுள்ளன. இதனைகலாசாரஆக்கிரமிப்பாகப் பார்க்கும் ஏனைய மதங்களும் தத்தமது தற்பாதுகாப்புக்காக ஆங்காங்கே கிடைத்த இடங்களில் எல்லாம் தமது மத அடையாளங்களை நிறுவி வருகின்றன.

இது ஒரு எதிர்வினையாற்றலே தவிர, உள்நோக்கத்தோடு கூடிய வலிந்த நடவடிக்கையல்ல. தமது மதங்கள் அழிக்கப்பட்டுவிடுமோ என்கிற அச்சமே அவற்றைப் பின்பற்றுவோரை எதிர்வினையாற்ற வைக்கிறது. எனவே எய்தவன் இருக்க அம்பை நோவது போல, வினையாற்றியவர்களைவிட்டுவிட்டு எதிர்வினையாற்றியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது சரியானதல்ல.

இந்த நிலையில் முதலில் சட்ட அனுமதியற்ற விகாரைகளையும் பௌத்த வழிபாட்டிடங்களையும் அப்புறப்படுத்திவிட்டு ஏனைய சமயப் பொருள்களையும் சின்னங்களையும் அப்புறப்படுத்துவதேபொருத்தமானதாகவும்ஏற்புடையதாகவும்இருக்கும். இல்லையேல் அதுவே புதுக்குழப்பத்துக்குக்காரணமாகிவிடும்.

# ஐக்கியம் அவசியம்



இந்துமதி

சிறுபான்மையின மக்களை அரவணைத்துச் செல்வதன் முக்கியத்துவத்தை ஆட்சியாளர்கள் இனியும் உணராதுவிட்டால் இலங்கை என்ற நாடு மீட்சி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அறவே இல்லாமல் போய்விடும்.

இனப் பிரச்சினை என்று கூறும்போது தமிழர்கள் தான் நினைவுக்கு வருவார்கள். அந்த அளவுக்கு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர். தமிழ் இனத்தவர்கள் என்ற வகையில் தமது உரிமையைப் பெறுவதற்காக போராட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டனர். ஆனால் சிங்கள இனவாதிகள் சமஉரிமை வழங்குவதைத் தடுத்து நிறுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டனர்.

தமது உரிமைக்காக அகிம்சை வழியில் சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபட்ட தமிழர்கள் கொடூரமான முறையில் தாக்குதல்களுக்கு உள்ளானார்கள். சாதாரண மக்கள் மட்டுமல்லாது நாடாளுமன்ற உறுப்பினர்களும் தாக்கப்பட்டனர். இவற்றுக்குப் பின்னணியில் அப்போதைய அரசுகள் இருந்தமை தெளிவாகத் தெரிந்தது. அரசின் ஆசீர்வாதம் கிடைத்ததால் இனவெறியர்கள் எவ்வித அச்சமுமின்றித் தமிழர்களுக்கு எதிரான வன்செயல்களில் ஈடுபட்டதைக் காண முடிந்தது. தமிழ் இளைஞர்கள் இதன் விளைவாக ஆயுதமேந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். சுமார் 30ஆண்டுகளாக நீடித்த போரின் அழிவுகள் கணக்கிட முடியாதன. ஆனாலும் ஆட்சியாளர்களின் மனங்களில் மாற்றத்தைக் காண முடியவில்லை. தமிழர்களின் அவலங்களுக்கும் தீர்வு கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தான் முஸ்லிம் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் நாட்டை உலுக்கி விட்டது. எவருமே கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குத் தற்கொலைக் குண்டுதாரிகளால் ஈஸ்ரர் ஞாயிறு தினத்தன்று அப்பாவி மக்களின் உயிர்கள் ஈவு இரக்கமற்ற வகையில் பறித்தெடுக்கப்பட்டன. பலர் மிக மோசமான காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். வெளிநாடுகளில் இயங்கி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தில் இணைந்து பயிற்சி பெற்ற உள்ளூர் முஸ்லிம்கள் சிலரே தற்கொலை குண்டுதாரிகளாக மாறி இந்த அட்டூழியத்தைப் புரிந்துள்ளனர். இதனால் இங்கு வாழ்கின்ற ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களும் குற்றவாளிகளாகப் பார்க்கப்படுகின்றதொரு நிலை உருவாகி விட்டது.

குண்டுத் தாக்குதல்களில் சிங்கள மக்கள் மட்டுமல்லாது தமிழ் மக்களும் கொல்லப்பட்டமை கவனத்தில் கொள்ளத்தக்கது. சிரியா. ஈராக் ஆகிய நாடுகளில் தளம் அமைத்து இயங்கி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் அமெரிக்கா தலைமையில் அவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற தாக்குதல்களால்

> வருமானத்தைத் தருகின்றதொரு முக்கிய துறையான சுற்றுலாத்துறை முற்றாகவே முடங்கிவிட்டது. இது நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித்து விட்டது. பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளுகின்ற இந்த நாடு தற்போது மேலும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

பெரும் பின்னடைவை எதிர்கொண்டு வருகின்றனர். எங்கோ ஓரிடத்தில் தாக்குதலை நடத்தித் தமது இருப்பை உறுதி செய்ய வேண்டிய கட்டாய நிலையொன்று அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்கு இலங்கை வாப்பானதொரு நாடாக அவர்களுக்கு மாறிவிட்டது. இந்தத் தாக்குதல்களின் போது சுற்றலாப் பயணமாக இங்கு வந்து தங்கியிருந்த வெளிநாட்டினர் பலரும்கொல்லப்பட்டதால் வெளிநாடுகளிலிருந்து வந்து செல்பவர்கள் தமது பயணங்களை நிறுத்திக்கொண்டனர்.

வருமானத்தைத் தருகின்றதொரு முக்கிய துறையான துற்றுலாத்துறை முற்றாகவே முடங்கிவிட்டது. இது நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாகப்பாதித்து விட்டது. பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளுகின்ற இந்த நாடு தற்போது மேலும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.



அற்ப காரணங்களுக்காக சிங்கள இனவாதிகளால் முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களது தொழுகைக்குரிய பள்ளிவாசல்களும் தாக்கப்பட்டன. இது முஸ்லிம் மக்களைப் பெரும் விரக்தி நிலைக்குள் தள்ளிவிட்டது. இங்கு முஸ்லிம் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற சம்பவங்களை ஏனைய நாடுகளில் வாழ்கின்ற முஸ்லிம்கள் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன.

ஆனால் தற்கொலைக் குண்டுதாரிகளாக உள்ளூர் முஸ்லிம்கள் மாறுவார்களென எவருமே எதிர்பார்க்கவில்லை.

இந்தநாட்டின் இரண்டு பிரதான சிறுபான்மை இனங்களாக விளங்கும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் பெரும்பான்மை மக்கள் அரவணைந்துச் செல்லும் போதுதான் இன ஐக்கியம் தோன்றும். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற பேதம் மறையும். இலங்கையர் என்ற சிந்தனையும் உருவாகும். இதற்கு முன்னோடியாக அந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக பாரபட்சமின்றி ஆராய்ந்து தீர்வை வழங்க வேண்டும்.

# உதயன் பத்திரிகையிடம் ரூ. 6 லட்சம் வாங்குங்கள்!

## முதல்வரிடம் கோரினர் முன்னணி உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், மே 9

உதயன் பத்திரிகை நிறுவனத்திடம் 6 லட்சம் ரூபா வேண்டித் தாருங்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் ஜெயசீலன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சபை அமர்வில் முதல்வரிடம் கோரிக்கை விடுத்தார். மாநகர சபையின் இந்த வருடத்தின் 4ஆவது அமர்வு முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி கோரிக்கையை முன்னணியின் உறுப்பினர் முன்வைத்தார்.

'யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைப் பரப்புக்குள் சித்திரைப் புத்தாண்டின்போது பண்டிகைக்கால வர்த்தகத்தை அனுமதிப்பதா இல்லையா என்ற விடயம் தொடர்பில் ஆராயப்பட்டதனை உதயன் பத்திரிகை முனீஸ்வரன் வீதியில் இந்தமுறை பண்டிகை வியாபாரத்துக்கு அனுமதி எனத் தவறாக செய்தி பிரசுரித்தமையால் அதனை அடிப்படையாகக் கொண்டு நூறு வர்த்தகர்கள் அங்கே வர்த்தகத்தில் ஈடுபட்டனர். ஆனால் அவர்கள் வரி செலுத்தவில்லை. இந்த செய்தி பிரசுரித்த நிறுவனம் இதனால் ஏற்பட்ட இழப்பான 6 லட்சம் ரூபாவையும் தர வேண்டும்' என்று உறுப்பினர் ஜெயசீலன் கோரிக்கை முன்வைத்தார்.

'இதனைத் தடுக்கச் சென்ற சமயம் தன்னையும் அடித்துக் கலைக்க முற்பட்டனர். நல்லவேளை நான் தப்பிவிட்டேன். எனவே நிறுவனம் இதனை பொறுப்பேற்க வேண்டும் அல்லது செய்தியாளர்கள் யார் எனத் தெரிவிக்க வேண்டும்' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அதன்போது கருத்துரைத்த முன்னணியின் மற்றுமோர் உறுப்பினரான வ.பார்த்தீபன், 'குறித்த செய்தி நிறுவனத்தினால் ஏற்பட்ட நட்டத்தை நிறுவனம் அல்லது அந்த செய்தியாளரே ஈடு செய்ய வேண்டும். அல்லது யார் அந்த செய்தியாளர் எனத் தெரிவிக்க வேண்டும்' என்றார். இதனால் சபையில் பெரும் அமளி ஏற்பட்டது.

இது தொடர்பில் உறுப்பினர் ந.லோகதயாளன் கருத்துத் தெரிவிக்கையில், 'நானும் செய்தியாளர் என்ற வகையில் பத்திரிகை நிறுவனத்துக்கு எதிராக அல்லது செய்தியாளர்களுக்கு எதிராக குற்றம் சுமத்துவதற்கு முன்பு செய்தி தொடர்பில் இந்த உறுப்பினர்களோ சபையினரோ என்ன நடவடிக்கை எடுத்திருந்தனர். அது தவறான செய்தியாக இருந்திருந்தால் அந்த நிறுவனத்தைத் தொடர்பு கொண்டிருக்க முடியும். இதேநேரம் இது விளம்பரம் அல்ல. இதில் அதிக பணம் எனப் பிரசுரித்தால் அவர்கள் செலுத்தியிருப்பார்களா? செய்தி நடைமுறை அறிந்து பேச வேண்டும். செய்தி ஒன்று பிரசுரித்தால் அதன் சரி பிழையைச் செய்தி ஆசிரியரிடமே கோர முடியும். அதன் செய்தியாளரை எவருமே கோரமுடியாது என்பதே உண்மை. இதனையறியாது அதிகாரம் இல்லாத இந்தச் சபையில் பேச முடியாது. அதேநேரம் உண்மையில் அந்தச் செய்தியால் சபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டது என்பது தவறு. மாறாக பண்டிகை விற்பனைக்கு வெளியாரை அனுமதிப்பதா இல்லை வர்த்தக சங்கம் நடாத்துமா என முதல் நாள் மாலைவரை தெளிவான முடிவை இந்தச் சபை வர்த்தகர்களுக்கு அறிவிக்காமல் விட்டதனால் வந்த வியாபாரிகள் தாம் நினைத்த இடத்தில் விற்பனையில் ஈடுபட்டனர். அதன் பொறுப்பு, முடிவெடுக்க முடியாமல் தடுமாறிய சபையிடமே உள்ளது' என்றார்.

இதனையடுத்து குறித்த பத்திரிகைச் செய்தியை மாநகர முதல்வர் முழுமையாக சபைக்கு வாசித்துக் காண்பித்ததோடு செய்தியில் தவறு கிடையாது. அதன் தலைப்பில் சிறு மாற்றம். இருப்பினும் இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படாமல் இருக்க எதிர்காலத்தில் முற்கூட்டியே திட்டமிட்டு முடிவை மேற்கொண்டால் இவ்வாறான நிலமை ஏற்படாது' என்று முதல்வர் பதிலளித்தார்.

(த)

# பணியின்போது உயிரிழந்த தொழிலாளர்களுக்கு இழப்பீடு

*குண்டுவெடிப்பில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி*

வவுனியா, மே 9

வவுனியாவில் பணியின்போது உயிரிழந்த சுகாதாரத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தற்காலிகமாக தலா ஒன்றரை இலட்சம் ரூபா நகரசபையால் வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. நகரசபை உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் நிதி திரட்டி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதி வழங்க முடியும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் சிறப்பு அமர்வு தவிசாளர் இ. கௌதமன் தலைமையில் நேற்று நடைபெற்றது. வவுனியாவில் அண்மையில் கொல்களத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தபோது தொழிலாளர்கள் நால்வர் உயிரிழந்திருந்தனர்.

பணியின்போது உயிரிழந்த குறித்த குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குவது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காகவே கூட்டம் நடைபெற்றது. அவர்களுடைய உயிரிழப்புத் தொடர்பாக முழுமையான விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

'குறித்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மாதாந்தச் சம்பளம் வழங்கக்கூடிய வகையில் சபை பரீசிலிக்க வேண்டும் அரசிதழிலும் அவ்வாறான சரத்து இருக்கிறது' என்று உறுப்பினர் க.சந்திரகுலசிங்கம் சுட்டிக்காட்டினார். 'குறித்த இழப்பு ஈடுசெய்யமுடியாதது. நகரசபைச் சட்டத்துக்கமைய அவர்களுக்கு அதி உச்சதொகை நிச்சயமாக வழங்கவேண்டும். ' என்று உறுப்பினர் சு.காண்டீபன் தெரிவித்தார்.

'உயிரிழந்த சுகாதாரத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 25 இலட்சம் ரூபா வழங்க வேண்டும்' என்று உறுப்பினர் பிரசன்னா வலியுறுத்தினார். இழப்பீடு கொடுப்பது தொடர்பாக நேற்றைய அமர்வில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. மீண்டும் கலந்துரையாடுவதாகத் தெரிவிக்கப்பட்டது. அண்மையில் தீவிரவாதிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட பொது மக்களுக்கு சபையில் உறுப்பினர்கள் நேற்று மெழுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (த-110)

# மாணவர்களின் கைது பழிவாங்கும் செயலே

*சார்ள்ஸ் எம்.பி. விளாசல்*

யாழ்ப்பாணம், மே 9

முன்னாள் அரச தலைவர் மகிந்தவை தலைமை அமைச்சராக்க கூட்டமைப்பு ஒத்துழைக்காமைக்கு பழிவாங்கும் செயலே யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் கைது என்று தெரிவித்தார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 25ஆம் திகதி முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக்க கூட்டமைப்பு ஒத்துழைக்கவில்லை. இதற்குப் பழிவாங்குவதற்காகக் காத்திருந்த மைத்திரிபால சிறிசேன தற்போதைய நிலமையை பயன்படுத்தி கூட்டமைப்பையும் தமிழ் மக்களையும் பழிவாங்கும் நோக்கில் மேற்கொண்ட செயலே யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் கைது விடயம். உண்மையில் எந்த பாரதூரமான செயலிலும் மாணவர்கள் ஈடுபடவில்லை.

ஏப்பிரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்கள் தொடர்பில் பல நாள்களின் முன்பே இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் தகவல் வழங்கியுள்ளன. இருப்பினும் நடவடிக்கை எடுக்காது சம்பவம் இடம்பெறட்டும் எனக் காத்திருந்தனர். ஏனெனில் இலங்கை தொடர்பில் உள்ள ஐ.நா தீர்மானத்தில் இருந்து வரும் பன்னாட்டு அழுத்தத்தில் இருந்து தப்ப முடியும். என்பதற்காக.

இதேநேரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவில் கடந்த நவம்பர் 29ஆம் திகதி இடம்பெற்ற இரு பொலிசார் கொலையுடன் தொடர்புபட்டதாக கைது செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப் புலியான அப்பாவி இன்னமும் சிறையில் இருக்கின்றார். ஆனால் அதனை எவர் செய்தார்களோ அதில் ஒருவரே குற்றத்தையும் ஒப்புக்கொண்டதோடு பொலிசாரின் துப்பாக்கியும் மீட்கப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் அந்த அப்பாவியை விடுவிக்க அரச தலைவர் நடவடிக்கை எடுக்கவில்லை. குற்றவாளிகளுக்குப் பதிலாக அப்பாவிகள் இங்கு தண்டிக்கப்படுகின்றனர் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். இவ்வாறான அவல நிலைகளுக்கு தீர்வு என்ன? - என்றார்.

(ம-105)

# 720 கிலோ கடல் அட்டைகளுடன் நபரொருவர் வங்காலையில் கைது

மன்னார், மே 9

மன்னார் வங்காலை பகுதியில் 720 கிலோ கடலட்டைகளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வங்காலை கிராமத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே கடந்த செவ்வாய்க்கிழமை அவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கடற்படையினரும், சிறப்பு அதிரடிப்படையினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த கடல் அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. மீட்கப்பட்ட கடலட்டைகள் மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. குறித்த நபர் உரிய அனுமதிப் பத்திரம் இன்றி கடல் அட்டைகளை வைத்திருந்தமையினாலேயே கைது செய்யப்பட்டார் என்று கடற்படை தெரிவித்துள்ளது. (ம-56)



# நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த குடும்பத்தலைவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

கொடிகாமம், மே 9

நண்பர்களுடன் கதைத்துக் கொண்டு நின்ற குடும்பத் தலைவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பருத்தித்துறை திக்கம் கொட்டடியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அல்வாய் மேற்கு நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த நடராசா சிவஜெகநாதன் (வயது -58) என்பவரே அவ்வாறு உயிரிழந்தவராவார். இறப்புத் தொடர்பில் பருத்தித்துறை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர் அறிக்கையை பார்வையிட்ட பருத்தித்துறை நீதிவான் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மூலம் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார். பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா சடலத்தை பார்வையிட்டு உடற்கூற்றுப் பரிசோதனையை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரி மூலம் மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.


(ம-159)

# வன்முறைக்குப் பலியாகாமல் ஒற்றுமையாக இருக்கன்வேண்டும்

## யாழ். மாவட்டச் செயலர் வேதநாயகன் கருத்து

யாழ்ப்பாணம், மே 9

ஒரு சிலரின் தனிப்பட்ட வன்முறை செயற்பாட்டுக்கு நாம் செவி சாய்க்காது ஒற்றுமையாக இருக்க வேண்டும் இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.



நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கான ஆத்ம சாந்தி வழிபாடு யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் பாரிய குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில் பலர் கொல்லப் பட்டுள்ளனர். ஒரு சிலரின் மதம், இனம் சார்ந்த இந்த வன்முறை செயற்பாட்டினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளுக்கு நாம் துணை போகக் கூடாது. நாம் முதலில் ஒற்றுமையாக இருக்க வேண்டும். பாதுகாப்பு தொடர்பில் நாம் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் ,சர்வமத தலைவர்கள் உட்பட்ட செயலக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டு நிமிட மௌன அஞ்சலி இடம்பெற்றது. தொடர்ந்து மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. (ஜ-7,ரி1,37)







# நீரழிவு விழிப்புணர்வுக்கு தாதிய பரிபாலகிகள் குழு

யாழ்ப்பாணம், மே 9

பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனையில் நீரழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த மருத்துவமனை தாதிய பரிபாலகிகள் குழு நேற்றுமுன்தினம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கியமான மருத்துவ சூழலில் மருத்துவமனையில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் நோயாளர்களுக்கு அவர்களைப் பார்வையிடச் செல்வதற்கும், அயல் மருத்துவமனை மற்றும் அயல் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கும் சிறந்த ஆரோக்கியமான வாழ்க்கைக்குரிய வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக இக் குழு அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் முக்கிய நோக்கங்கள் இப் பிரதேச மக்களிடையே காணப்படுகின்ற சுகாதாரப் பிரச்சினைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வருகின்ற நீரழிவு நோயாளர்களில் நீரழிவுக் கட்டுப்பாடானது பெரும்பாலானோருக்கு 20 தொடக்கம் 25 வீதம் மட்டுமே காணப்படுகிறது .

இவர்களுக்கு முதற்படியாக இக் குழுவினரால் உணவுக் கட்டுப்பாடு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது .

நீரிழிவு நோயாளர்கள் மேற்கொள்ளவேண்டிய அனைத்து சுகாதார நடவடிக்கைகள் தொடர்பாகவும் கட்டம் கட்டமாக மேற்கொள்ளவுள்ளனர் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திட்டமிடல் மருத்துவ அதிகாரி மருத்துவர் வே.பத்மநாதன் கலந்து கொண்டார். (ஜ-159,9)





## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மே 9

வல்வெட் வேவில் அருள்மிகு சிறி வீரகத்தி விக்னேஸ்வர சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய ஆதீனகர்த்தாக்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

# தனியார் கல்வி நிறுவனங்கள் நகர சபையில் பதிய வேண்டும்

## சாவகச்சேரியில் அறிவிப்பு

சாவகச்சேரி, மே 9

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் தனியார் முன்பள்ளிகள் அனைத்தும் சபை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். இவ்வாறு தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

கல்வி நிலையங்கள், முன்பள்ளிகளில் இயங்கும் வகுப்புகளின் எண்ணிக்கை உட்பட்ட விவரங்களுடன் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

குறித்த காலப்பகுதிக்குள் பதிவினை மேற்கொள்ளாத தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகள் தொடர்ந்து செயற்பட அனுமதிக்கப்படமாட்டாது எனவும் அறிவித்துள்ளார். (ஜ -9 )

## கலந்துரையாடல்

மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் மக்கள் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

"நிலமாறும் நீதிச் செயன்முறைகளும் மக்கள் பிரதிநிதிகளின் வகிபாகமும், பொறுப்புக்களும்" எனும் தொனிப் பொருளில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் நகர சபை மக்கள் பிரதிநிதிகளை இக் கலந்துரையாட .லில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. (ஜ-159)

## அஞ்சலி நிகழ்வு

கொடிகாமம், மே 9

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்த அப்பாவிப் பொது மக்களுக்கு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் நேற்று முன்தினம் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் பங்குத் தந்தை எக்ஸ் டபிள்யூ ஜேம்ஸ் அடிகளார், அருட் சகோதரிகள், பங்கு மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-159)

# வர்த்தகர்கள் 14 பேருக்கு 48 ஆயிரம் ரூபா தண்டம்

## பாவனையாளர் விதிகளை மீறியமைக்காக

சாவகச்சேரி, மே 9

பாவனையாளர் சட்ட விதிமுறைகளை மீறிய வர்த்தகர்கள் 14 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 48 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை அலுவலர்களால் தென்மராட்சி பிரதேசத்தில் அண்மையில் சோதனை நடத்தப்பட்டது.

சோதனைகளின் போது திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுடன் 14 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர் .

இந்த வழக்குகள் நேற்று தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நான்கு வர்த்தகர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதமும், 5 வர்த்தகர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும், 2 வர்த்தகர்களுக்கு தலா 4 ஆயிரத்து 500 ரூபா வீதமும், 3 வர்த்தகர்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபா வீதமும் மொத்தம் 48 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (9)

## தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் கையளிப்பு

குடத்தனை கத்தோலிக்க தேவாலயத்தில் நல்ல தண்ணிர் தேவையைக் கருத்தில் கொண்டு தண்ணீர் சுத்தி கரிப்பு இயந்திரம்(பில்டர்) வழங்கிவைக்கப்பட்டது. பொற்பதி நலன் காப்பகத்தினரால் கடந்த திங் கட்கிழமை ஆலய பங்குத் தந்தையிடம் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது. (ஜ-70)

## வாழைக்குலை திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 9
கோப்பாய், நீர்வேலிப் பிரதேச வாழைத்தோட்டங்களில் உள்ள வாழைக்குலைகள் அண்மைக் காலமாக திருடப்பட்டு வருகின்றன.
குறித்த பகுதியில் காணப்படும் கதலி வாழைக்குலைகளைத் திருடர்கள் வெட்டிச் செல்வதாக வாழைச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.
தற்போது வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சியடைந்தும் கூடத் திருடர்கள் வாழைக்குலைகளைக் களவாடிச் செல்கின்றனர்.
அனேகமாகத் தோட்டங்களில் வாழைக்குலைகள் முற்றிய நிலையில் உள்ளன. வாழைப் பழத்தின் விலை வீழ்ச்சியால் செய்கையாளர்கள் சிலர் இந்தக் குலைகளை வெட்டி சந்தைப்படுத்துவதைத் தவிர்த்தும் வருகின்றனர். இதைப் பயன்படுத்தி திருடர் வாழைக்குலைகளை மிகவும் தந்திரமாகக் களவாடிச் செல்கின்றனர் என்று செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ஐ1-7)

## அஞ்சலி நிகழ்வு

சாவகச்சேரி, மே 9
தென்மராட்சி பிரதேச கலாசார அலகுகள் பிரிவின் ஏற்பாட்டில் சர்வமத வழிபாடும், அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று இடம்பெற்றன.
கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களின் போது உயிர்நீத்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலும், குண்டுவெடிப்பில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களது நலம் வேண்டியும் வழிபாடு நடத்துமாறு கொழும்பு கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது.
இதனையடுத்து தென்மராட்சி பிரதேச செயலகத்தில் வழிபாட்டு நிகழ்வுகள் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றன.
நிகழ்வில் பௌத்த ,இந்து, கத்தோலிக்க, கிறிஸ்தவ இஸ்லாம் மதத் தலைவர்கள் கலந்து கொண்டு வழிபாடுகள் நடத்தியதுடன் உயிர்நீத்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (ஐ-9)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே 9
யாழ்ப்பாண மாவட்ட பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது.
சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தலைவர் க.சுதாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஹஸ்ஸானா அப்துல்சமியூ கலந்துசிறப்பிக்கவுள்ளார்.
ஓய்வுபெற்ற. அங்கத்தவர்கள் மதிப்பளித்தல் மற்றும் புதியநிர்வாகத் தெரிவும் இதன்போது இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-63)

# சோதனை என்று முன்னரே அறிவித்தும் அந்தப் பொருள்களை அகற்றாதது ஏன்?

## யாழ்.பல்கலையினரிடம் கட்டளைத் தளபதி கேள்வி

யாழ்ப்பாணம் , மே 9
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பாதுகாப்புச் சோதனை நடத்தப்படவுள்ளது என்று முற்கூட்டியே அறிவித்தும், அங்கிருந்த அநாவசியமான பொருள்கள் ஏன் அப்புறப்படுத்தவில்லை?


இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி, பல்கலைக் கழக பீடாதிபதிகளிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.
யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சியை பலாலியில் உள்ள படைத்தளத்தில் நேற்றுமுன்தினம் பீடாதி பதிகள் மற்றும் பதிவாளர் சந்தித்து மாணவர்கள் விடுதலை தொடர்பில் கலந்துரையாடினர்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் படையினர் கடந்த வாரம் நடத்திய சோதனையில் மாணவர் ஒன்றிய அறையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஒளிப்படமும் உணவ கத்தில் தியாகதீபம் திலீபனின் ஒளிப்படமும் இருந்தன. அவற்றை மீட்ட படையினர் மாணவர் ஒன்றியத்தின் இரு மாணவர்களையும் உணவகத்துக்கு உணவு வழங்குபவரையும் கைது செய்திருந்தனர். அவர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.
அந்த மாணவர்களை விடுவித்தால் பல்கலைக் கழக செயற்பாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டு செல்ல முடியும் என்று பல்கலைக் கழக நிர்வாகம் சார்பில் கோரிக்கை விடுக்கப் பட்டது. அதன்போதே கட்டளைத் தளபதி மேற்க ண்டவாறு கேள்வியெழுப்பினார்.
அதேபோன்று, பல்கலைக்கழக வளாகத்தில் தூபிகள் அமைத்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் இடம்பெற்றமை தொடர்பில் நிர்வாகத்தினர் அறிந்திருக்கவில்லையா? அதில் நிர்வாகத்தினர் ஏன் தலையிடவில்லை?
அரச இடத்தில் அரசுக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெறுவதனை அனுமதிக்க முடியாது. எமது கண் முன்பாகக் கண்டதன் பின்பும் அதனை விடமுடியாத நிலையில் உரிய சட்ட முறைமை.யின் பிரகாரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. இருப்பினும் விரைவான விடுத லைக்கு முயற்சிக்கப்படும் என்று கட்டளைத் தளபதி கூறியுள்ளார்.
அதாவது தூபிகள் அமைத்தல், நினைவேந்தல் முற்றம் எனத் தேவையற்ற செயல்பாடுகளைத் தவிர்த்து மாணவர்களைக் கல்வி நடவடிக்கையில் வழிப்படுத்துங்கள். தேவையற்ற செயற்பாட்டை தவிருங்கள் என்றும் கூறியுள்ளார்.
இதுதவிர, பல்கலைக் கழகம் ஆரம்பிக்கும்போது பல்கலைக் கழக ஊழியர்கள் சோதனையில் ஈடுபட்டாலும் பல்கலைக்கழகத்துக்கு வெளிப்புறத்தில் உங்கள் பாதுகாப்பு நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெறவேண்டும் என்று பல்கலைக் கழக நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்தனர். (த-105)



## கொல்லப்பட்டவர்களின் 21 ஆம் நாள் நிகழ்வுகள்

வவுனியா, மே 9
குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் 21 ஆம் நாள் நிகழ்வுகள் வவுனியா நகரசபை மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.
கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல்களைக் கண்டிப்பதோடு அந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட உறவுக்காக வடக்கு கிழக்கு மலையகம் உள்ளடங்கலான தமிழர் பிரதேசமெங்கும் 3 நிமிடங்கள் அமைதி வழிபாடும், நினைவேந்தல் நிகழ்வும் ஈழப்புரட்சி அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## 18 மாணவர்களுக்கு ஈருருளிகள் கையளிப்பு



கொடிகாமம், மே 9
கைதடி நுணாவில் பகுதியில் வசித்து வரும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 18 மாணவர்களுக்கு ஈருருளிகள் அண்மையில் வழங்கப்பட்டன.
கைதடி உதவும் கரங்கள் அமைப்பின் ஊடாக சுவிஸ் நாட்டில் வசிக்கும் பத்மநாதன் ஜெயதாஸின் 50 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-159)

## சட்டவிரோத வலை வைத்திருந்தனரென மூவர் கைது

கொழும்பு, மே 9
வவுனியா குளம் பகுதியில் சட்டவிரோத மீன்பிடி வலைகளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
வவுனியா தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து நேற்று மதியம் நடத்திய திடீர் சுற்றிவளைப்பில் மூவரும் கைது செய்யப்பட் ட னர்.
தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.
கைது செய்யப்பட்ட மூவரும் சரீரப் பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளனர். அவர்கள் எதிர்வரும் 16ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## பாரம்பரிய உணவகத்தால் காரைநகர்வாசிகளுக்கு பயன்

யாழ்ப்பாணம்,மே 9
காரைநகரில் திறக்கப் பட்டுள்ள பாரம்பரிய உணவகத்தால் அங்குள்ள அரச அலுவலகங்களில் பணியாற்றும் அலுவலகர்கள் மற்றும் பொதுமக்கள் நன்மை அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. காரைநகர் வலந்தலைச் சந்தியில் குறித்த உணவகம் கடந்த மாதம் 29 ஆம் திகதி காரைநகர் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கத்தால் திறந்து வைக்கப்பட்டது.
இங்கு பாரம்பரிய உணவு வகைகளான இலைக்கஞ்சி, ஒடியல் பிட்டு, கீரை வடை, பழரசம், கற்றாழை யூஸ், குழசாதம் மற்றும் சிற்றுண்டிகளும் விற்பனை செய்யப்படுகின்றன. இரசாயனம் இல்லாமல் சேதன முறையில் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறிகள், பழங்களும் இங்கு விற்கப்படு கின்றன. காரைநகரில் உள்ள பாடசாலைகள் மற்றும் அரச, தனியார் அலுவலகங்களில் பணியாற்றும் அலுவலர்கள் பலருக்கும் இந்த உணவகம் பெரும் நன்மை அளித்துள்ளது. காரைநகர் கமநல சேவைகள் நிலையத்தால் இந்த உணவகம் மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது.



## ஆவணங்கள் அ.அட்டைகள் மீட்கப்பட்டன

வவுனியா, மே 9
வவுனியா மன்னார் வீதியில் சாளம்பைக்குளம் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து 15 அடையாள அட்டைகள் மற்றும் பல ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளன. பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் நடத்திய சோதனையில் அவை மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
இருபகுதியினரும் இணைந்து நடத்திய சோதனையில் பூட்டியிருந்த வீட்டிலிருந்து அச்சுப்பிரதி செய்து லெமினேட் செய்யப்பட்ட பதினைந்து அடையாள அட்டைகள் மற்றும் சில ஆவணங்கள் மீட்டெடுத்துள்ளனர். அவை பூவரசங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

## மாணவர்கள் கைதைக் கண்டித்து சபை 10 நிமிடங்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் கைதைக் கண்டித்து யாழ்ப்பாண மாநகர சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்கள் நேற்றுமுன்தினம் ஒத்தி வைக்கப்பட்டன.
மாநகர சபையின் 2019ஆம் ஆண்டின் 4ஆவது அமர்வு முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் ஆரம்பமானபோது, கடந்த 21ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களில் உயிரிழந்த மக்களுக்காக தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனையடுத்து சபை அமர்வுகள் ஆரம்பமானது.
நாட்டில் ஏற்படுத்தப்பட்ட அவசரகால சட்ட விதிகள் மற்றும் பயங்கரவாத சட்ட விதிகளின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் மற்றும் உணவக நடத்துநர் கைது செய்யப்பட்டனர். இவர்களை உடனடியாக விடுவிக்க கோரியும் அவர்களின் கைதைக் கண்டித்தும் சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி சபை நடவடிக்கையை 10 நிமிடங்களுக்கு முதல்வர் இ.ஆனல்ட் ஒத்திவைத்தார். (த-105)

# மக்கள் நடமாடும் இடங்களில் மறைகாணிகளை பொருத்துக

## கொடிகாமம் பொலிஸ் நிலையப் பரிசோதகர் அறிவுறுத்து

கொடிகாமம், மே 9

பொது மக்கள் எங்கு கூடுதலாக இருக்கிறார்களோ அந்த இடத்தை இலக்கு வைத்தே பயங்கரவாதிகள் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். மறைகாணிகள் மூலம்தான் இவர்களை இனங்காண முடிந்தது. எனவே பொது இடங்களில் மறைகாணிகளைப் பொருத்துங்கள்.

இவ்வாறு கொடிகாமம் பொலிஸ் நிலைய பாதுகாப்புப்பரிசோதகர் தவக்குமார் தெரிவித்தார்.

அரச, அரச சார்பற்ற அலுவலகங்களுக்கான பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல் கொடிகாமம் வணிகர்மன்றமண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை காலை நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வங்கிகள், அரச, தனியார் காரியாலயங்களுக்கு வருபவர்களை நாம் பரிசோதிக்க முடியாது.

நீங்களே உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

ஏனெனில் இன்றைய நாட்டு சூழ்நிலையில் 150 பொலிஸ் தேவை ஆனால் எம்மிடம் நூற்றுக்கு 40 வீதமான பொலிஸ் அலுவலகர்கள் தான் இருக்கிறார்கள். எனவே உங்கள் பாதுகாப்பை நீங்களே உறுதிப்படுத்த வேண்டும். வங்கிகளில் சந்தேக நபர்களை காணும் போது உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாதுகாப்பு அலுவலர்கள் பொறுப்புடையவர்களாக இருக்க வேண்டும்.

பொலிஸ் அலுவலர்கள் வர்த்தக நிலையங்கள், நிறுவனங்களுக்கு தனித்தனியாகச் சென்று பாதுகாப்பு தொடர்பான விடயங்களை கூற முடியாது. பாதுகாப்பு தொடர்பான விடயங்களை அந்தந்த நிறுவனத்தின் பொறுப்பதிகாரிகள் ஊழியர்களுக்கும் எடுத்துக் கூற வேண்டும். பொது இடங்களில் மறைகாணிகளைப் பொருத்துங்கள். அது எப்போதும் இயங்கு நிலையில் இருக்க வேண்டும். உங்கள் நிறுவனங்களில் மறைகாணி இல்லாவிட்டால் எப்படி பூட்டுவது என்பதை தீர்மானியுங்கள் . சந்தேகமான நபர்கள் உங்கள் நிறுவனங்களுக்கு வந்தால் உடனே பொலிஸ் நிலையத்துக்கு தகவல் தாருங்கள். பேருந்து நடத்துநர்கள் மாணவர்கள் மற்றும் பயணிகளை ஏற்றும் போது புத்தகப்பைகளைப் பரிசோதனை செய்ய வேண்டும். எங்கே வைத்து ஏற்றுவது எங்கே நிறுத்துவது சந்தேகமான நபர்களை கண்டால்சடுதியாகஎன்னசெய்ய வேண்டும் என்று தெரிந்து வைத்திருக்க வேண்டும் - என்றார். (ஐ-159)

## உந்துருளியில் ஆடுகளை ஏற்றிச் சென்ற நபருக்கு தண்டம்

சாவகச்சேரி, மே 9

இரு ஆடுகளை பெட்டியில் வைத்து உந்துருளியில் ஏற்றிச் சென்றவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் சாரதிக்கு எதிராக 2 ஆடுகளை பெட்டியில் வைத்து அவற்றினைச் சித்திரவதைக்கு உள்ளாக்கும் நிலையில் ஏற்றிச் சென்றார் என்று குற்றம் சாட்டப்பட்டது.

இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து சாரதிக்கு தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## பொலிஸ் அலுவலர் நினைவாக 127 பேர் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 9

இளவாலை சித்திர மேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தால் மறைந்த சாவகச்சேரி பொலிஸ் நிலைய முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் ஆ.துரைராஜசிங்கத்தின் நினைவாக குருதிக்கொடை நிகழ்வு இடம்பெற்றது.

சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை நடைபெற்றது. 3 ஆவது தடவையாக நடத்தப்பட்ட இந் நிகழ்வில் 127 குருதிக்கொடையாளர்கள் குருதிக்கொடை வழங்கினர். தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை குருதி வங்கி ஆரம்பிக்கப்பட்டு 7 வருடகால வரலாற்றில் அதிகளவான குருதிக்கொடையாளர்கள் குருதிக்கொடை வழங்கிய நிகழ்வாக இது அமைந்தது.

இவ்வாறு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின்குருதி வங்கி பொறுப்பதிகாரி ம.பிரதீபன் தெரிவித்தார். (ஐ-114)





## பிளாஸ்ரிக்கை நிறுத்திவிட கிராமங்களில் விழிப்புணர்வு

சாவகச்சேரி, மே 9

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் பாவனையை முற்றாக நிறுத்துதல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கோர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி நகரசபை பொது சுகாதார பரிசோதகர் பி.தளிர்ராஜ் மற்றும் கோர் நிறுவன வளவாளர்களால் கருத்தமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் மற்றும் கிளைகளில் பணியாற்றுவோருக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்றுக் காலை 8 மணிக்கும், சாவகச்சேரி பிரதேச கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார்களுக்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் 10 மணிக்கும் நடைபெற்றது. (ஐ-9)

# உள்ளூர் சுற்றுலாத்துறையையும் அசாதாரண நிலை பாதித்துள்ளது

## வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் காரணமாக உள்ளூர் சுற்றுலாத்துறையும் கடும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளது. சுற்றுலாத்துறைக்கு பாதுகாப்பு வழங்க அரசு முன்வர வேண்டும். இவ்வாறு வலி. கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் நிலவி வரும் தாக்குதல்கள் தொடர்பான அச்சத்தின் நிமிர்த்தமாக உள்நாட்டில் காணப்படும் சுற்றுலாத்துறை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வடக்கில் உள்ளூராட்சி அமைப்புக்களின் கீழ் கேள்விக்கோரல் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள சுற்றுலா பிரதேசங்களின் வருமானங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. எமது சபைக்குட்பட்ட நிலாவரைக் கிணற்றினைப் பார்வையிடுவதற்காக தினமும் பெருந்தொகை சுற்றுலாப் பய ணிகள் வருகை தந்த போதும் தற்போது சுற்றுலாப்பயணி கள் வருகை தருவதில்லை.

இதனால் உள்ளூரில் பிரதேச சபைகளிடம் இருந்து கேள்வி அடிப்படையில் சுற்றுலா மையங்களைப் பெற்று நிர்வகிப்பவர்கள் தொழில் ரீதியில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசின் உத்தியோகபூர்வ அறிவிப்புக்களின் பிரகாரமும் செய்திகளின் அடிப்படையிலும் மக்கள் பெருமளவில் ஒன்றுகூடுவதை தவிர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

தற்போதே வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தற்போது ஏற்பட்டுள்ள இடர் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து கேள்விக்கோரலின் அடிப்படையில் இலட்சக்கணக்கான பணத்துக்கு கேள்விகளைப்பெற்றோர் எமது சபைகளிடம் தமது வருமானமற்ற இக்கட்டான நிலமைகளைத் தெரியப்படுத்தி வருகின்றனர். நாமும் எடுக்கக் கூடிய மாற்று நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்துவருகின்றோம். மேலும் பிரதேச சபை. இவ்வாறான நிலையில் சுற்று லாத்துறையினை அடிப்படையாகக் கொண்டு இயங்கிய சிறு வியாபார முயற்சிகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன-என்றார். (ஐ)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மே 9

கொக்குவில் கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமி ஆலய (புதுக்கோவில்) வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமைமுற்பகல்10மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம், மே 9

குரும்பசிட்டி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமைமுற்பகல்10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

✦✦✦✦

யாழ்ப்பாணம், மே 9

சுன்னாகம்மயிலணிதிருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத சிறி விஸ்வநாதசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்குத் தீர்த்தத்திருவிழா வும் நடைபெறும்என்று ஆலய ஆதீன தர்மகர்த்தாக்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

## நிர்வாக தெரிவு

யாழ்ப்பாணம், மே 9

கொக்குவில்தென்மேற்கு ஜே/127 கிராம அலுவலகர் பிரிவு முதியோர் சங்க நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக பொன்னுத்துரை தவராசலிங்கம், செயலராக சின்னத்துரை கனகரத்தினம், பொருளாளராக சுப்பிரமணியம் கருணாகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

# பயங்கரவாதத் தாக்குதல்களால் போராடவே அச்சப்படும் நிலை

## கேப்பாபிலவு மக்கள் தெரிவிப்பு



**முல்லைத்தீவு, மே 9**

**குண்டுவெடிப்புகளைத் தொடர்ந்து ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் எமது போராட்டத்துக்கு மக்கள் சமுகமளிப்பதற்கு அச்ச நிலை தோன்றியுள்ளது என்று கேப்பாபிலவில் நில மீட்புக்காகப் போராட்டம் நடத்தும் மக்கள் தெரிவித்தனர்.**

தமது நிலங்களை விடுவிக்குமாறு கேப்பாப்பிலவில் மக்கள் போராட்டம் நடத்த ஆரம்பித்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 798 நாள்களாகியுள்ளன. எனினும் அவர்கள் போராட் டத்தைக் கைவிடவில்லை. நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

கேப்பாபிலவு நிலமீட்புப் போராட்ட ஒருங்கிணைப்பாளர்களான சந்திரலீலா, அரியகலா, இந்திராணி ஆகியோர் அதில் கருத்துத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கேப்பாபிலவை பூர்வீக மாக கொண்ட நாங்கள் மூன்று ஆண்டுகள் எங்கள் பூர்வீக மண்ணில் எங்களை மீள்குடியமர்த்து மாறு கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது . படையினரும் பொலிஸாரும் சுற்றிவளைப்புக்களில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் இருவர் உட்பட பல்கலையின் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக சுதந்திரமாக நினைவு கூரல்களை செய்துவந்துள்ளோம். தற்போது மாணவர்களைக் கைதுசெய்தமை மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் இறுதிப்போரின் பின்னர் வடக்கு கிழக்கில் உள்ள மக்களின் நியாயமான போராட்டத்துக்கும் மக்களின் நீதிக்காகவும் பலவடிவங்களில் போராட்டங்களை முன்னெடுத்து வந்தவர்கள். நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் மேற் கொள்ளும் எங்கள் போராட் டத்தையும் மழுங்கடிக்கும் ஒன்றாகவே கைது தெரிகின்றது.

மாணவர்கள் இருவரையும் மிக விரைவில் விடுதலை செய்ய வேண்டும் என்று அரசதலைவரையும் தமிழ் அரசியல் வாதிகளையும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர். (கு-ரி3)

# மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 9

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக ஒரு மாத காலத்துக்கு வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று வியாழன் காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வவுனியா மாவட்டத்தில் கணேசபுரம் கிராமம், லக்ஸபானா கிராமம், மதகுவைத்தகுளம், தோணிக்கல், பண்டாரிக்குளம்,தவசிகுளம் ஆகிய இடங்களிலும், மன்னார் மாவட்டத்தில் ஆத்திக்குளி பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வவுனியா மாவட்டத்தில் லக்ஸபானா கிராமத்திலும், மன்னார் மாவட்டத்தில் ஆத்திக்குளி பறயனாளங்குளத்திலிருந்து உயிலங்குளம் வரை, முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முருங்கன்பிட்டியிலிருந்து நறுவிலிக்குளம் வரை,

வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்பாசன சபை, அடம்பன் நீர்ப்பாசன சபை, செம்மண்தீவு நீர்ப்பாசன சபை, முள்ளிக்குளம், செம்மண்தீவு வேர் கவுஸ், டொன் பொஸ்கோ, சிலாவத்துறை கடற்படைமுகாம், முள்ளிக்குளம் கடற்படைமுகாம், முருங்கன் விதைகள் உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன

கொழும்புத்துறை, மே 9

கொழும்புத்துறை பிரதேசத்தில் இருந்து மணியந்தோட்ட சந்தி வரைக்குமான பகுதிக்கு வலுக்கூடிய வீதி விளக்குகள் பொருத்தி வைக்கப்பட்டுள்ளதாக மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

குறிப்பாக துறைமுக சந்திக்கும் மணியந்தோட்டச் சந்திக்கும் இடைப்பட்ட முதன்மை வீதிக்கு வலுக்கூடிய வீதி விளக்குகள் கடலோரப் பிரதேசத்தை அண்டி பொருத்தப்பட்டுள்ளன.

சில இடங்களில் வீதி விளக்குகள் ஒளிராமல் பழுதடைந்தும் காணப்படுகின்றன.

இந்த வீதி விளக்குகள் யாவும் மாற்றப்பட்டு வலுக் கூடிய வீதி விளக்குகள் பொருத்தியும் வைக்கப்படும்.

இதேசமயம் கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய வீதிக்கு புதிதாக வீதி விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்படவும் உள்ளன - என்றார். (ஐ-17)



# தினச் சந்தை கட்டடத்துக்கு அடிக்கல்

மன்னார், மே 9

இருபது லட்சம் ரூபா செலவில் முருங்கன் ஆதார மருத்துவமனைக்கு அருகில் தினச் சந்தை கட்டடத்துக்கு அடிக்கல் நடப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் துரித அபிவிருத்தி திட்ட நிதியில் இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நேற்றுக் காலை நட்டு வைக்கப்பட்டது.

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்து அவர்களுக்கான ஜீவனோபாய வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் தினச் சந்தை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி. பரஞ்சோதி தலைமையில் நடை பெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில் நானாட்டான் பிரதேச சபை உபதவிசாளர் புவனம், நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் பிரதிநிதி நடேசானந்தன், நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்களான ஜொனி மற்றும் திருமதி வோல்ட்சன்.மதத்தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(ஐ-213)

# முஸ்லிம்களின் கடைகளில் கிளிநொச்சியில் சோதனை

கிளிநொச்சி.மே 9

கிளிநொச்சியில் உள்ள முஸ்லிம் வியாபார நிலையங்களில் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து கடும் சோதனை நடவடிக்கையில் கடந்த திங்கட்கிழமை ஈடுபட்டனர்.

கிளிநொச்சி பொதுச் சந்தை மற்றும் ஏ9 முதன்மை வீதியிலும், டிப்போச் சந்தியிலும் கனகபுரம் வீதியிலும் உள்ள முஸ்லிம் வியாபார நிலையங்கள் கடும் சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

இதன் போது சந்தேகத்துக்கு இடமான எவையும் மீட்கப் படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-214)



சோதனை நடவடிக்கையில் ஈடுபடும் படையினர் மற்றும் பொலிஸார்

# மறவன்புலவு மணல்காட்டு வீதி பாவிக்க முடியாதளவு சேதம்

## சீரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி, மே 9

தென்மராட்சி தெற்கில் கடந்த 2011 ஆம் ஆண்டு 30 மில்லியன் ரூபா செலவில் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மறவன்புலவு மணல்காட்டு வீதி தற்போது பாவிக்க முடியாத அளவுக்கு மோசமாகச் சேதமடைந்துள்ளது.

இதனால் வீதி அமைத்த காலத்தில் மகிழ்வுடன் பயணித்த அப் பகுதி மக்கள் தற்போது வேறு வீதியைப் பயன்படுத்தி பயணிக்கும் அளவுக்கு இந்த வீதி மோசமாகச் சேதமடைந்து காணப்படுகிறது.

கடந்த 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்ற போர் காரணமாக தென்மராட்சி தெற்குப் பகுதிகளைச் சேர்ந்த அனைத்துக் குடும்பங்களும் வெளியேறி வேறு இடங்களில் தஞ்சமடைந்தனர். அதன் பின்னர் அந்தப் பகுதி படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயமாக காணப்பட்டது. போர் முடிவடைந்த பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் கட்டம் கட்டமாக மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

அவ்வேளையில் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 30 மில்லியன் ரூபா செலவில் மணல்காடு வீதி கைதடி நாவற்குழி தெற்கு றாவளை வீதியிலிருந்து தனன்களப்பு எல்லை வீதி வரை சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்துக்கு தார்ச்சாலையாக செப்பனிடப்பட்டது. இதனையடுத்து அரச பேருந்து உட்பட அனைத்து வாகனங்களும் பயணித்துவந்தன.

> “வீதி தார்ச்சாலையாக செப்பனிடப்பட்டு எட்டு வருடத்தில் சுமார் மூன்றரை கிலோ மீற்றர் தூரம் வரை ( மறவன்புலவு மேற்குத் தொடக்கம் மறவன்புலவு கிழக்கு வரை )வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு அதன் இருபக்கமும் சேதமடைந்து குன் றும் குழியமாகக், காணப்படுகிறது.”

வீதி தார்ச்சாலையாக செப்பனிடப்பட்டு எட்டு வருடத்தில் சுமார் மூன்றரை கிலோ மீற்றர் தூரம் வரை ( மறவன்புலவு மேற்குத் தொடக்கம் மறவன்புலவு கிழக்கு வரை )வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு அதன் இருபக்கமும் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

தென்மராட்சி தெற்குப் பிரதேசம் விவசாயம் மற்றும் கடல்வளம் உள்ளதால் அங்கு வாழும் விவசாயிகள் கடற்றொழிலாளர்கள், மாணவர்கள் அரச பணியாளர்கள்.பொதுமக்கள் நலன்கருதி சேதமடைந்து காணப்படும் குறித்த வீதியை மழைகாலம் ஆரம்பிக்க முன்னர் சீரமைத்து தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொதுமக்கள் கேட்டுள்ளனர். (ஐ-9)

# பிறப்புச் சான்றிதழ் முக்கியம் போன்று தேர்தல் இடாப்பில் பெயரும் முக்கியம்!

## உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அறிவுறுத்துகிறார்

யாழ்ப்பாணம், மே 9

நபர் ஒருவரின் பிறப்புச் சான்றிதழுக்கு இருக்கும் முக்கியத்துவம்போன்று தேர்தல் இடாப்பிலும் பெயர் இருப்பது அவசியம். இதைப் புரிந்துகொண்டு மக்கள் செயற்பட வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அமல்ராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உள்ள தேர்தல் பிரிவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் மூன்று தேர்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. அரசதலைவர் தேர்தல் அல்லது மாகாண சபைத் தேர்தல் இந்த வருடம் நடைபெறும் சாத்தியமுள்ளது. வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் மே மாதம் 15 ஆம் திகதியளவில் ஆரம்பமாகும். ஆனால் ஒருவர் வாக்காளர் இடாப்பில் தங்கள் பெயர் இருக்க வேண்டும் என்று நினைப்பது குறைவு. அதற்கான முக்கியத்துவம் குறைந்து செல்கிறது. ஒருவருக்கு பிறப்பு இறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோமோ அதேபோன்று வாக்களித்தல், வாக்காளர் இடாப்பில் பெயர் இருத்தல் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வாக்காளர் இடாப்பில் பெயர் இருப்பதைப் போன்று அரசியல் கட்சிகளும் வாக்கெடுப்பு முகவர்களை நியமிப்பது அவசியம்.

இதுவரை எந்தக் கட்சியும் அவ்வாறான ஒரு செயற்பாட்டை மேற்கொள்ளவில்லை. அரச அலுவலர்கள் மற்றும் ஊடகங்கள் வாக்காளர் இடாப்பில் பெயர் இருப்பதன் அவசியத்தை உணர்ந்து அதனை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். வாக்காளர் மீளாய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மீளாய்வுப் படிவங்களைப் பெற்று அதனை நிரப்பி வழங்க வேண்டும். வாக்காளர் இடாப்பில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதைக் கிராம அலுவலர் அல்லது தேர்தல் ஆணையகத்தின் இணையத் தளத்தில் பார்வையிட முடியும். இந்தமுறை வழங்கப்படும் தேர்தல் மீளாய்வுப் படிவங்களுடன் அடுத்த மூன்று வருடத்தில் 18 வயதைப் பூர்த்தி செய்து வாக்களிப்பதற்குத் தகுதி பெறுபவர்களின் விவரங்களையும் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

15 பிரதேச செயலகத்தில் 10 பிரதேச செயலகங்களின் கிராம அலுவலர்கள் சந்திப்பு நிறைவு செய்யப்பட்டு விட்டன. மே மாதம் 15ஆம் திகதி தொடக்கம் பீ.சி படிவங்கள் (வாக்காளராவதற்கான பதிவுப் படிவங்கள்) விநியோகம் இடம்பெறும். ஜூன் முதலாம் திகதி வாக்காளர் பதிவு தினம். அதனால் அதன் பின்பே வீடுகளில் இருந்து படிவங்களை கிராம அலுவலர்கள் கையேற்பர். இதற்கு அரசியல் கட்சிகளும் முகவர்களை நியமிக்க முடியும். அதற்கு எந்தக் கட்சியும் முகவரை நியமிக்கவில்லை.

மக்களின் உரிமையில் மிக உயர்வானது வாக்குரிமை. அதற்கு வாக்காளர் பதிவு கட்டாயமானது.

விநியோகம் செய்யப்பட்ட படிவங்கள் ஜூன் 14ஆம் திகதிக்கு முன்பு வீடுகளுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதற்குப் பொது அறிவித்தல் வழங்கினாலும் ஊடகங்களின் பங்கே மிக முக்கியமானது - என்றார்.

(த-7105)

## பாலத்துக்குள் வீழ்ந்து பாரவூர்தி விபத்து



முல்லைத்தீவு, மே 9

நெல் ஏற்றிச் சென்ற பாரவூர்தி பாலத்துக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து முல்லைத்தீவு வெள்ளாம் குளப்பகுதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றது. வீதியால் பயணித்தவேளை குறுக்கே மாடு ஒன்று வந்ததால் சாரதி தடம்புரண்டதில் பாலத்துக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளாது. சாரதி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஆசிரியர், மாணவருக்கு குளவிகள் தாக்கின

வவுனியா, மே 9

குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஆசிரியரும் 3 மாணவர்களும் பாதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பெரியகோமரசங்குளம் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் குளவிகள் கொட்டின. பாடசாலையின் மைதானத்துக்கு அருகே காணப்பட்ட குளவிக்கூடு காற்றால் கலைந்து ஆசிரியர் மற்றும் மாணவர்களைத் தாக்கின என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து பாடசாலை முற்பகல் 11 மணியுடன் மூடப்பட்டது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் குளவிக் கூடு அங்கிருந்து கலைக்கப்பட்டது. நேற்று வழமைபோன்று பாடசாலை இயங்கியது என்று தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சியில் கடந்த வாரம் குளவி கொட்டி குடும்பத் தலைவர் உயிரிழந்திருந்தார். (த-110)



## வன்னிவிளான் குள ஆலய பொங்கல் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, மே 9

முல்லைத்தீவு வன்னிவிளான் குள ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மேலதிக மாவட்டச் செயலர் தலைமையில் இடம்பெற்றது.

ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் பொங்கலுக்கு வருகை தரும் பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி இராணுவ பொறுப்பதிகாரி, பொலிஸ் பொறுப்பதிகாரி, துணுக்காய் பிரதேச சபை தவிசாளர், மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர், பொது அமைப்புக்கள், ஆலய நிர்வாகத்தினர் ஆகியோர் இணைந்து இக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன் போது ஆலய வளாகத்தில் கடைகள் போடுவதற்கு முற்று முழுதாக தடை செய்யப்பட்டுள்ளதோடு அப் பிரதேசத்தில் உள்ள இரண்டு உணவுக்கடைகள் மட்டும் அனுமதிக்கப்பட்டன. இப் பொங்கல் நிகழ்வில் தூக்குக்காவடி, பறவைகாவடிபோன்ற நேற்றிக்கடன்களை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டது.

ஆலயத்துக்கு வரும்பொது மக்கள் தங்க ஆபரணங்களை தவிர்க்குமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ)

*முல்லைத்தீவு மூங்கிலாறில்*

## புதையல் தோண்டியபோதும் எதுவும் சிக்கியிருக்கவில்லை

முல்லைத்தீவு, மே 9

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட மூங்கிலாறு வடக்குப் பகுதியில் நீதிமன்ற உத்தரவில் நேற்றுத் தனியார் காணியைத் தோண்டி தேடுதல் நடத்தப்பட்டது. எனினும் எதுவித பொருளும் மீட்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

போர்க் காலத்தில் அந்த வீட்டில் விடுதலைப்புலிகள் வெடிப்பொருள்கள் மற்றும் பெறுமதியான பொருள்களைப் புதைத்து வைத்திருந்தனர் என்று இரகசியப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு தோண்டிப் பார்க்க முல்லைத்தீவு நீதிமன்றில் அனுமதி கோரினர்.

அதன்படி நீதிமன்றப் பதிவாளர் மற்றும் பொலிஸார், படையினர், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், பிரதேசசெயலக அதிகாரிகள், கிராம அலுவலர் ஆகியோர் முன்னிலையில் காணி தோண்டப்பட்டது. எந்தவொரு பொருளும் சிக்கவில்லை.

குறித்த வீட்டு வளாகத்தில் ஒரு இடத்தில்



புதையல் தோண்டப்பட்டுள்ளதாகப் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர். காணியின் முந்திரிகை மரம் ஒன்றின் கீழ் பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு புதையல் தோண்ட முற்பட்ட போது அங்குள்ள மக்கள் அதனைக் கண்டுள்ளனர். அவர்களைக் கண்டதும் புதையல் தோண்டுவதற்கு வந்தவர்கள் தப்பியோடியுள்ளனர். அது பற்றித் தமக்குத் தெரிவிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னரும் பல தடவைகள் முல்லைத்தீவு நீதிமன்ற அனுமதி பெற்று பல இடங்களில் நிலம் தோண்டப்பட்டபோதும் எதுவும் சிக்கியி ருக்கவில்லை. (த.ரி-3)

## அனுமதியின்றி மணல் ஏற்றினரென 3 சாரதிகள் கைதாகிப் பிணை

முல்லைத்தீவு, மே 9

பிற இடங்களில் மணல் ஏற்றும் அனுமதிப் பத்திரங்களைப் பயன்படுத்தி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் மணல் அகழ்ந்தனர் என்ற குற்றச்சாட்டில் 3 வாகனங்களுடன் அவற்றின் சாரதிகள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் அவர்கள் சாரதிகள் பொலிஸாரிடம் சிக்கியிருந்தனர். அவர்கள் பிணையில் சென்றாலும் மணல் ஏற்றிய உழவு இயந்திரம் மற்றும் டிப்பர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 10ஆம் திகதி சாரதிகள் மீதான வழக்கு நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த.ரி-3)

## சந்தேகநபர்கள் இருவருக்கு நாளை வரை விளக்கமறியல்

கிளிநொச்சி, மே 9

கிளிநொச்சியில் துப்பாக்கி மற்றும் வாள்கள் வைத்திருந்தனர் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரையும் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி, முட்கொம்பன் பிரதேசத்தில் பொலிஸாரும்படையினரும் இணைந்து திடீர் சோதனை நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர்.

இதன்போது இடியன் வகை உள்ளூர் துப்பாக்கிகள், ஏகே ரவைகள் மற்றும் வாள்கள் உள்ளிட்ட பொருள்கள் மீட்கப்பட்ட துடன் சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் இருவரையும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தியபோது நாளை 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஐ-214)

# நாட்டின் பாதுகாப்பு சீர்செய்யப்பட்டுள்ளது சுற்றுலாவிகளின் தடையை நீக்குங்கள்!

## வெளிநாடுகளின் தூதர்களிடம் அரசதலைவர் கோரிக்கை

கொழும்பு, மே 9

தேசிய பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளதால் சுற்றுலாப் பிரயாணிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு அரசதலைவர் வெளிநாட்டு தூதுவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளோடு அரசதலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில் மைத்திரிபால சிறிசேன இவ்வாறு கோரிக்கை விடுத்தார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாதுகாப்புப் படையினரின் வெற்றிகரமான நடவடிக்கைகள் காரணமாக எதிர்வரும் சிலதினங்களுக்குள் பயங்கரவாதச் சவாலை இலங்கையிலிருந்து இல்லாதொழிக்க முடியும். பாடசாலைகள், அரச நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்குப் பொலிஸாரும் முப்படை யினரும் இணைந்து சிறப்புப் பாதுகாப்புக்குழுவொன்றை அமைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்காகவும் சிறப்பு வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்து முஸ்லிம் மக்களும் இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டியதில்லை. அவர்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழலைக் கட்டியெழுப்பவும் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்குமான பொறிமுறையொன்று சமயத் தலைவர்களின் தலைமைத்துவத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களே அனைத்து நடவடிக்கைகளுக்கும் முக்கிய சவாலாக அமைந்துள்ளன.

இனவாதத்தையும் மத வாதத்தையும் பரப்பும் நோக்குடன் சிலர் சமூக ஊடகங்களின் வாயிலாக மேற்கொள்ளும் போலிப் பரப்புரைகள் நாட்டில் அமைதியான சூழலைக் கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்குத் தடையாகவுள்ளன என்று அரசதலைவர் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த வெளிநாட்டுத் தூதுவர்கள், சமூக ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து ஊடகங்களிலும் தெரிவிக்கப்படும், மக்களைப் பீதியடையச் செய்யும் அறிவிப்புக்களை உடனடியாகத் தடை செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

இலங்கையின் தேசிய பாதுகாப்புக்காக எடுக்கவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாக வினவப்பட்ட கேள்விகளுக்கு பாதுகாப்புத் துறை பிரதானிகள் பதிலளித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியவர்களைக் கண்டறிவதற்காக உயர் நீதிமன்ற நீதியரசரைக் கொண்டதாக நியமிக்கப்பட்ட சிறப்பு விசாரணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கை தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கமைவாக எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அதனைச் சட்டமா அதிபரிடம் முன்வைக்கவுள்ளேன். ஒரு வாரத்தில் அது மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படும் என்று அரசதலைவர் தெரிவித்தார்.

இலங்கையில் வாழும் ஏதிலிகள் தொடர்பில் கருத்து தெரிவித்த அரசதலைவர், பல்வேறு நாடுகளிலிருந்து வருகை தந்த பெரும்பாலான ஏதிலிகள் எமது நாட்டில் தங்கியிருக்கின்றனர். அவர்களை வேறு நாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கான உதவிகளை பெற்றுத்தருமாறு தூதுவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதி, இதற்கான அனைத்து வேலைத்திட்டங்களும் தற்போது திட்டமிடப்பட்டுள்ளன என்று தெரிவித்தார் என்று ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)



## மகிந்தவின் திட்டம் ரணிலால் ஏற்கப்பட்டது

கொழும்பு, மே 9

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு வலுவான ஆட்சேபனைகள் உள்ளன எனவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பாக தெரிவுக் குழுவை நியமித்து ஆராய எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றின் நேற்றைய அமர்வில் தலைமை அமைச்சருக்கு ஆலோசனை வழங்கினார். இதை ரணிலும் ஏற்றுக்கொண்டார்.

இதன்பின்னர் அங்கு கருத்து தெரிவித்த தலைமை அமைச்சர், இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பாக ஏற்கனவே எதிர்கட்சியுடன் கலந்துரையாடியுள்ளேன். ஒருமித்த கருத்துக்களை அடைய மேலும் விவாதங்களை நடத்த தயாராக உள்ளேன். தற்போது இருக்கும் பயங்கரவாதச் சட்டத்துக்கு மாற்றாகவே இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஜனநாயகத்துக்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் என பலர் தெரிவித்துள்ளனர். இது பரிசீலிக்கப்படுவது அவசியம் - என்றார். (ம)

## பெருவிழா ஆரம்பம்!

கொடிகாமம், மே 9

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் மகோற்சவ பெருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும் எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டமும் மாலை சப்பை ரதத் திருவிழாவும் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ம-159)

# பயங்கரவாத தாக்குதல்களைத் தடுக்க கோத்தாவின் வழியைப் பின்பற்றுங்கள்

## அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ரொபேர்ட் ஒபிளேக் ஆலோசனை

கொழும்பு, மே 9

தீவிரவாதத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு, உயர்மட்ட தொழிற்திறன் வாய்ந்த குழுவொன்றை அரசு உருவாக்க வேண்டும் என்று இலங்கைக்கான முன்னாள் அமெரிக்க தூதுவர் றொபேர்ட் ஓபிளேக் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடந்த கருத்தரங்கில், சீனா மற்றும் தெற்காசியாவை நோக்கிய அமெரிக்காவின் அயலுறவுக் கொள்கை மற்றும் இலங்கைக்கான அதன் அர்த்தம், என்ற தொனிப்பொருளில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தீவிரவாதத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு, கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்புச் செயலராக இருந்த போது, உருவாக்கப்பட்டிருந்த தொழிற்திறன் வாய்ந்த உயர்மட்ட குழுவைப் போன்றதொரு குழுவை, அரசு உருவாக்க வேண்டும். தொழிற்திறன் வாய்ந்த உயர்மட்டக் குழு இலங்கையில் இருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு முன்னரும், பின்னரும் அமெரிக்கா செய்த தவறுகளில் இருந்து இலங்கை பாடம் கற்றுக் கொள்ள முடியும். உண்மையில், போர்க்காலத்தில் பாதுகாப்புச் செயலராக கோத்தபாய ராஜபக்ச இருந்த போது, இலங்கையில் அத்தகைய குழுவொன்றை வைத்திருந்தார்.

நாட்டில் உள்ள எல்லா புலனாய்வு கிளைகளினதும், தகவல்களை பகிர்ந்து, அதனை உயர்மட்டங்களுக்கு கொண்டு சென்று இத்தகைய தாக்குதல்கள் நடக்காமல் இருப்பதை உறுதி செய்தார். அது போன்றதொரு குழுவை உருவாக்குவது முக்கியம் - என்றார். (ஓ.5)

# மர அரிவு ஆலையில் தீ

## 73 லட்சம் பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசம்



மட்டக்களப்பு.மே 9

மர அரிவு ஆலை ஒன்றில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தால் சுமார் 73 இலட்சம் ரூபாய் பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் மரத் தளவாடங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

காத்தான்குடி மீன்பிடி இலாகாவீதியில் உள்ள மர அரிவு ஆலையிலேயே நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

மர அரிவு ஆலையில் தீ பரவுவதை அவதானித்த அங்கிருந்த காவலாளி இதுபற்றி அறிவித்ததும் விரைந்து செயற்பட்ட அதிகாரிகள் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் பற்றி பொலிஸார் விரிவான விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் மர அரிவு ஆலை உரிமையாளர் முஹம்மத் ரஜீன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

# நாட்டின் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

## முப்படைத் தளபதிகள் கூட்டாகத் தெரிவிப்பு

கொழும்பு, மே 9

தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்களின் பாதுகாப்புக் கருதி முப்படையினரும் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேசிய பாதுகாப்புத் தொடர்பில் தேவையற்ற கருத்துக்கள் கூறுவதை அனைவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு முப்படைகளின் தளபதிகளும் வலியுறுத்தியுள்ளனர்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சில் கடந்த திங்கட்கிழமை பாதுகாப்புச் செயலருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இராணுவ தளபதி லெப்டினன்ஜெனரல்மகேஷ்சேனாநாயக்க:

கடந்த 21ஆம் திகதி தீவிரவாதிகளின் தொடர் குண்டுத் தாக்குதல்களால் 253 உயிரிழப்புக்கள்ஏற்பட்டன. 400க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். அவசரகாலச் சட்டத்தை உரிய தருணத்தில் நடைமுறைப்படுத்தியதால் நிலமை கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

முப்படையினரும்தொடர்ந்து சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். குற்றவாளிகளைக் கைது செய்யவும், அவர்களுக்கு எதிரான ஆதாரங்கள் தற்போது முழுமையாகத் திரட்டப்பட்டுள்ளன.

அடுத்தக்கட்ட சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான வழிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

பன்னாட்டுத் தீவிரவாதிகளின் அனைத்துச் செயற்பாடுகளும் முடக்கப்பட்டுள்ளன. இவர்களுடன்நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தவர்களும் விரைவில் அடையாளப்படுத்தப்படுவார்கள் - என்றார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியல் டி சில்வா:

கடல்மார்க்கம் ஊடாக நாட்டுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. துறைமுகங்களைத் தாக்கிப் பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்தும் தீவிரவாதிகளின் முயற்சி தோற்கடிக்கப்பட்டுள்ளது. அனைத்து துறைமுகங்களின் பாதுகாப்பும் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முப்படையினரும் எவ்வித வேறுபாடுகளுமின்றி முழுமையாகச் செயற்பட்டனர். தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் கடற்பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவசரகாலச் சட்டத்தின் ஊடாகவே நெருக்கடி நிலையைச் சமாளிக்க முடிந்துள்ளது - என்றார்.

வானூர்திப் படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி:

இரண்டு முக்கியபன்னாட்டு வானூர்தி நிலையங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வின்போது குற்றவாளிகள் உள்வரவும், வெளிச் செல்லவும் முடியாத அளவுக்கு வானூர்திப் படையினர் மற்றும் பொறுப்பான அதிகாரிகள் செயற்படுகின்றார்கள். பாதுகாப்புக் கருதிய சோதனையின் போது பிரயாணிகள் பெரும்பாலும் அதிருப்தி அடைகின்றனர். நாட்டின் பாதுகாப்புக்கு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தீவிரவாதத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் நாட்டை விட்டுச் செல்ல முடியாத அளவுக்குப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. முப்படையினரின் அர்ப்பணிப்புக்களுடன் விரைவில் பன்னாட்டுத் தீவிரவாதத்தை இல்லாதொழிக்க முடியும் - என்றார்.

(த-61)

# அரச தலைவர் மைத்திரியுடன் மல்லுக் கட்டப்போகும் பூஜித

கொழும்பு, மே 9



நியாயமான காரணங்களின்றி தம்மை கட்டாய விடுமுறையில் அனுப்ப அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்த முடிவுக்கு எதிராக, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்ய பொலிஸ் மா அதிபர் முடிவு செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சட்ட நிபுணர்களுடன் ஆலோசனைகளை நடத்தி வருகிறார். அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இந்த மனுவை அவர், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளார்.

கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட பூஜித ஜயசுந்தர, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகும் வரை, பொலிஸ் மா அதிபரின் அதிகாரபூர்வ வதிவிடத்தில், தங்கியிருக்க முடிவு செய்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

அதேவேளை அவருக்காக உந்துருளி அணி பாதுகாப்பு உள்ளிட்ட சில பொலிஸ் பாதுகாப்புகள் நீக்கப்பட்டுள்ளன.

ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல்களை அடுத்து, பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து விலகுமாறு பூஜித ஜயசுந்தரவை அரச தலைவர் கேட்டிருந்தார்.

எனினும், அவர் பதவி விலக மறுத்த நிலையில், அரச தலைவர் கட்டாய விடுமுறையில் அனுப்பி விட்டு, பதில் பொலிஸ்மா அதிபராக சந்தன விக்ரமரத்னவை நியமித்துள்ளார். (ஒ.5)

# பேருவளைப் பொலிஸில் 20 வாள்கள் ஒப்படைப்பு

கொழும்பு, மே 9

ஆயுதங்கள் வைத்திருப்போர் அவற்றை ஒப்படைக்குமாறு பொலிஸ் தலைமையகம் வழங்கிய 3 நாள் கால எல்லைக்குள் பேருவளை பொலிஸ் நிலையத்தில் மாத்திரம் 20 வாள்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தொடர்ந்து நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சோதனை நடவடிக்கைகளுக்கமைய சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் குறித்து பொலிஸார் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வந்தனர். குறிப்பிட்ட இடங்களில் வாள்கள் பலவற்றை மீட்டுள்ளனர். அவற்றை ஒப்படைக்குமாறு பொலிஸார் கடந்த சனிக்கிழமை தொடக்கம் 3 நாள்களுள் ஒப்படைக்க வேண்டும் என்று கூறியிருந்தனர்.

அதற்கமையவே பேருவளை பகுதியில் இவ்வாறு 20 வாள்கள் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேருவளைப் பொலிஸ் பிரிவில் பொலிஸார் 16 வாள்களை மீட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் 20 வாள்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (த-71)

# மதங்களுக்கான தனி அமைச்சுக்களை ஒரே அமைச்சின் கீழ் கொண்டுவரவும்

## சுதந்திரக் கட்சி வலியுறுத்துகிறது

கொழும்பு, மே 9

நாட்டில் மதங்களுக்குத் தனித்தனியாகக் காணப்படுகின்ற அமைச்சுக்களை ஒரே அமைச்சின் கீழ் கொண்டு வரவேண்டும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்துகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அதன் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர இவ்வாறு வலியுறுத்தினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இந்து, பௌத்தம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் மதங்கள் ஒருபோதும் அடிப்படைவாதமாகவும் பயங்கரவாத செயற்பாடுகளாகவும் வெளிப்பட்டதில்லை. முஸ்லிம் சமயத்தில் உள்ள தௌஹீத் ஜமாத் என்ற பிரிவு மாத்திரமே இவ்வாறு செயற்படுகின்றது.

இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பாதுகாப்புப் பிரிவினரால் அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். பரந்தளவில் சோதனைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் சாதாரண முஸ்லிம் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

சாதாரண மக்கள் பாதிக்கப்படாத வகையில் ஏனையோர் செயற்பட வேண்டும்.

எனினும் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களுடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் அரசியல்வாதிகளுடன் அல்லது அவர்களுக்கு உதவி செய்பவர்கள் நிச்சயமாகக் கைது செய்யப்பட வேண்டும். சுதந்திரக் கட்சி உறுப்பினர்களோ அல்லது கட்சியைச் சேர்ந்தவர்களோ பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டால் நாம் ஒருபோதும் தலையிடப்போவதில்லை. அவ்வாறானவர்களைப் பாதுகாக்க முற்படுவதும் இல்லை.

சில முஸ்லிம் கட்சிகள் அங்கத்தவர்களை அதிகரித்துக் கொள்வதற்காகவும், வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் தமது குறுகிய அரசியல் நோக்கத்துக்காகவும் மக்களைத் தூண்டிவிடும் வகையில் செயற்படுகின்றனர்.

அவ்வாறான கட்சிகள் குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும். அடிப்படைவாதத்தின் மூலம் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்குத் தீர்வு காண முடியாது - என்றார்.

(த-61)

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# பாதுகாப்பை உறுதிப்படுத்தியே பாடசாலைகளைத் திறந்தோம்

## கல்வி அமைச்சர் சபையில் பதில்

கொழும்பு, மே 9

அனைத்துப் பாதுகாப்புப் பிரிவுகளின் நம்பிக்கை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்திய தகவல்களைப் பெற்ற பின்னரே பாடசாலைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம். இவ்வாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா சபையில் நேற்றுமுன்தினம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டாம் தவணைக்காக பாடசாலைகளை எனது தனிப்பட்ட அபிப்பிராயத்தில் ஆரம்பிக்கவில்லை.

அனைத்து பாதுகாப்பு பிரிவுகளின் நம்பிக்கை மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக அவர்கள் அரச தலைவர் மைத்திரிபால, தலைமை அமைச்சர் ரணில் முன்னலையில் உறுதிப்படுத்திய பின்னரே பாடசாலைகளை ஆரம்பிக்கத் தீர்மானித்தோம்.

பாடசாலைகள் திங்கட்கிழமை ஆரம்பிக்க முன்னர் ஞாயிற்றுக்கிழமை அனைத்துப் பாடசாலைகளும் பாதுகாப்புப் பிரிவால் சோதனை செய்யப்பட்டன. பாடசாலைகளின் பாதுகாப்புக்காக பாதுகாப்பு பிரிவினர் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். என்றாலும் திங்கட்கிழமை பாடசாலைக்கு மாணவர்களின் வீதம் குறைவாக இருந்தபோதும் இன்று (நேற்றுமுன்தினம்) சற்று அதிகரித்திருக்கின்றது. அடுத்துவரும் தினங்களில் சாதாரண நிலமைக்கு திரும்பும் என்று நம்புகின்றேன்.

போரின்போதும் சரி அதற்கு முந்திய தெற்குக் கலவரத்தின்போதும் சரி பாடசாலைகள் மூடப்படவில்லை. தடைப்படாது இடம்பெற்றன. ஆனால் தற்போது இடம்பெற்றிருப்பது பன்னாட்டுப் பயங்கரவாதமாகும். அரசு என்ற அடிப்படையில் முடியுமான அனைத்துப் பாதுகாப்பையும் பாடசாலைகளுக்கு வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்றார்.

(ஒ.5.31)

### இராணுவத்தினரும் பொலிஸாரும்

# பன்னாட்டு மனித உரிமைகள் சட்டத்தையும், தராதரங்களையும் உறுதிப்படுத்தவேண்டும்

### இலங்கை அரசிடம் பன்னாட்டு மன்னிப்புச்சபை கோரிக்கை

கொழும்பு, மே 9
ஈஸ்டர் ஞாயிறு தொடர்குண்டுத் தாக்குதல்களையடுத்து இலங்கைப் பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார்கள். தற்போதைய சூழ்நிலையில், பன்னாட்டு மனித உரிமைகள் சட்டத்தையும், தராதரங்களையும் இலங்கை அரசு கட்டாயம் உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு பன்னாட்டு மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குண்டுத்தாக்குதல்களை அடுத்து 150க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதை உள்நாட்டுச் செய்திகள் மூலம் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. கைதுகள் எந்தச் சட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது குறித்துத் தற்போது பொதுவெளியில் தகவல்கள் இல்லை. இலங்கையின் பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்து நீண்டகாலமாகவே மன்னிப்புச்சபை விசனம் வெளியிட்டு வந்திருக்கிறது. குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்று மூன்று நாள்கள் கழித்து பொதுப் பாதுகாப்பு ஒழுங்கு விதிகளின் கீழ் அவசரகால நிலையும் அறிவிக்கப்பட்டது. அதன் கீழான சட்டவிதிகளும் நடைமுறைக்கு வந்துள்ளன. இந்த ஏற்பாடுகள் பல கடுமையான நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கக்கூடியவை.

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டிருப்பவர்களை இலங்கை அரசு விசாரணை செய்துவரும் நிலையில், தற்போதைய சூழ்நிலை நாட்டில் வெறுப்புணர்வையும், சமூகங்களின் மத்தியில் பிளவையும் தூண்டிவிடுவதற்குப் பயன்படுத்தப்படாதிருப்பதை அரசு உறுதிசெய்ய வேண்டுமென்று மன்னிப்புச்சபை கேட்டுக்கொள்கிறது.

கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்போர் சித்திரவதை செய்யப்படாத வகையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொலிஸாருக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் பரந்தளவானவையாக இருப்பதால் அவை முறைகேடுகள் செய்யப்படக் கூடிய ஆபத்துக்கள் இருக்கின்றன. இவற்றை அரசுக்குச் சுட்டிக்காட்ட மன்னிப்புச்சபை விரும்புகின்றது.

என்றுள்ளது. (த-61)

# 18 தாக்குதல்கள் நடத்த திட்டமிடப்பட்டிருந்தன

### சபையில் ரணில் பகீர் தகவல்

கொழும்பு, மே 9
ஈஸ்ரர் அன்று இடம்பெற்ற தொடர் தற்கொலைத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், அவர்கள் 18 இடங்களில் தாக்குதல்கள் நடத்த திட்டமிட்டிருந்தமை தெரியவந்துள்ளது. இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சிறப்பு அறிவிப்பை விடுத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்கொலைத் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றத்தில் கைதானவர்களுக்கு எதிராக இறுக்கமான, கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் தாக்குதலுக்கு உதவிபுரிந்தவர்களைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய பாதுகாப்பு நிலமைகள் குறித்துப் பொலிஸ்மா அதிபரிடம் முழுமையான அறிக்கையைப் பெற்றுள்ளேன். அதற்கு அமைவாக பாதுகாப்புகள் வழங்கப்படுகின்றன.

பயங்கரவாத தாக்குதல் ஐ.எஸ். அமைப்பால் நடத்தப்பட்டுள்ளது. கடந்த 2014 ஆம் ஆண்டு இந்த அமைப்பின் தலைவரால் இஸ்லாமிய இராச்சியத்துக்கு அழைப்பு விடுத்தபோது பல நாடுகளில் இருந்து முஸ்லிம்கள் சிரியா சென்று இணைந்து கொண்டனர். இலங்கையில் இருந்தும் சிலர் சென்றதாக புலனாய்வு அறிக்கை கூறுகின்றது. 2014 ஆம் ஆண்டில் இவர்கள் சென்றுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. துருக்கி ஊடாகச் சென்றதாகவே கூறப்படுகின்றது. 2014 ஆம் ஆண்டின் பின்னர் இஸ்லாமிய இராச்சியம் உருவாக்கப்பட்ட பின்னர் இங்கிருந்து சிரியா சென்று ஆயுத பயிற்ச்சி பெற்று இங்கு வந்ததாக தகவல்கள் கிடைத்துள்ளன. கொல்லப்பட்ட நபர்கள் அனைவரும் சிரியா சென்று ஆயுத பயிற்சி பெற்றுள்ளனர். அதேபோல் கைதுசெய்யப்பட்டுள்ள சிலரும் சிரியா சென்று பயிற்சி பெற்றதாக அறியமுடிந்துள்ளது.

ஸஹ்ரான் 2015ஆம் ஆண்டு சிரியா சென்றுள்ளதாகவும் துருக்கியில் இருந்து சிரியாவுக்கு சென்றபோது அவரது பெற்றோர் மற்றும் உறவினர்களும் சிரியாவுக்குச் சென்றுள்ளனர் என்ற தகவலும் கிடைக்கப் பெற்றுள்ளது. அவரது பெற்றோர்கள் சிறிது காலம் சிரியாவில் தங்கியிருந்து 2016ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் திகதி மீண்டும் இலங்கைக்கு வந்துள்ளனர். அவர்கள் குறித்தும் விசாரணை நடத்தப்படுகின்றது. இந்த பயங்கரவாத நகர்வுகளில் 18 தாக்குதல்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன. எனினும் அதற்கான இடம் வழங்கப்படவில்லை என்றும் பாதுகாப்பு அறிக்கை கூறுகின்றது.

எவ்வாறு இருப்பினும் இந்த அச்சுறுத்தல் முடிந்துவிடவில்லை. இந்தப் பயங்கரவாதம் உலகளாவிய பயங்கரவாதம். இதனை இலகுவாக முடிக்க முடியாது. இந்தப் பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புபட்ட இலங்கையர்களை கைது செய்து தடுத்தாலும் வேறு எந்த வழியிலும் இந்த பயங்கரவாதம் தலைதூக்க வாய்ப்புகள் உள்ளன. - என்றார். (ஒ.5.31)

## ட்ரோன் கருவி சுடப்படும் வான்படை எச்சரிக்கை

கொழும்பு, மே 9
தடையை மீறி பறக்கும் ஆளில்லா வானூர்திகள், ட்ரோன் கருவிகள் சுட்டு வீழ்த்தப்படும் என்று வான்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் கிகான் செனிவிரத்ன எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை வான்பரப்பில், ஆளில்லா வானூர்திகள் ட்ரோன் கருவிகள் பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ட்ரோன் கருவிகள் பறக்க விடப்படுவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் இதனை யாரும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. தடையை மீறிப் பறக்கும் ட்ரோன் கருவிகள், ஆளில்லா வானூர்திகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படும், என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அண்மைய நாள்களில் கொழும்பு நாரஹேன்பிட்டிய பகுதியிலும், மயிலிட்டிப் பகுதியிலும் ட்ரோன் கருவிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அவற்றின் மீது படையினரும் பொலிஸாரும் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர். எனினும் அவை தப்பிச் சென்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## தொடருந்து நிலைய நிலங்களை குத்தகைக்கு விட முடிவு

### வருமானமீட்ட வேண்டியுள்ளது என்று அமைச்சர் தெரிவிக்கிறார்

கொழும்பு, மே 9
தொடருந்துத் திணைக்களத்துக்குச் சொந்தமான நிலங்களைக்குத்தகைக்கு விடுவதற்கும் குத்தகை வருமானத்தைச் சேகரிப்பதற்கு தனியான இரு பிரிவுகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சர் அர்ஜூன ரணதுங்க இதனைத் தெரிவித்தார்.

அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வுக் குழுக் கூட்டம் பத்தரமுல்லையில் அமைந்துள்ள அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடருந்துத் திணைக்களத்துக்குச் சொந்தமான நிலங்களை சட்டத்துக்குப் புறம்பாக மோசடி செய்வதனூடாக திணைக்களத்தின் வருமானம் பெரிதும் பாதிப்படைகின்றது.

தமது பொறுப்பை முறையாக நிறைவேற்றி திணைக்களத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

தொடருந்துத் திணைக்களத்தைப் பிறருக்கு விற்காமல் பாதுகாத்துக்கொள்ளவே நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (த-61)



### வெடிப்பொருள்கள் மீட்பு வர்த்தகர் கைதானார்

கொழும்பு, மே 9
கலாவெவ இபலோகம பகுதியில் பெருமளவிலான வெடிப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகத்தில் வர்த்தகர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இபலோகம பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் நடத்திய சோதனையில் அவை மீட்கப்பட்டன.

சந்தேகநபர் கலாவெவ விஜிதபுர பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன் பின்னர் அவருக்குச் சொந்தமான வியாபார நிலையத்தைச் சோதனையிட்டபோது ஜெலனைட் குச்சிகள் 243, வெடிமருந்து 12 கிலோ 500 கிராம், டெட்டனேடர் 145 மற்றும் 36 கிலோவுக்கும் அதிகமான அமோனிய நைட்ரேட் என் பன மீட்கப்பட்டுள்ளன.

கைதானவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-71)

## கூட்டணி கண்டனம்

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலர், சிற்றுண்டிச் சாலை முகாமையாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டமையை தமிழர் விடுதலை கூட்டணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

அவர்களை உடன் விடுத்லை செய்யவேண்டும் என்றும் கூட்டணி கோருகின்றது.

இந்தக் கைதுகள், நிலைமையை சீரடையச்செய்வதற்குப் பதிலாக மோசமடையச் செய்கின்றன. இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் பொறுப்புக் கூறவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி விடுத்த கண்டனக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் இருவர், பல்கலைக்கழக உணவக நடத்துநர் ஆகிய மூவரும் கடந்த வாரம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த)

# பிரச்சினையை திசைதிருப்பவே யாழ். பல்கலை மாணவர் கைது!

## திருகோணமலை நகரசபை உறுப்பினர் சத்தியன் கண்டனம்

மூதூர்,மே 9

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை திசை திருப்பவே மாணவர்கள் கைது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது; இவ்வாறு தமிழர் சமூக ஜனநாயகக்கட்சியின் திருகோணமலை நகரசபை உறுப்பினர் சத்தியன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரணை செய்து வருகின்றமை தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

நாட்டில் இடம்பெற்ற துன்பியல் நிகழ்வுகளுக்கு காரணமானவர்களை இனம் காணுவதை விடுத்து தமிழர்கள் மீது தொடர்ச்சியாக துன்புறுத்தல்கள் மேற்கொள்வதையும் அவர்களது இயல்பு வாழ்வை சிதைக்கும் செயற்பாட்டையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நாட்டில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட கொலைகள், கடத்தல்கள், சித்திரவதைகள் என்பவற்றுக்கு எதிராக மாணவர்கள் போராடுகின்றார்கள். இந்நிலையில் மாணவர்களை பழிவாங்கும் நோக்கிலேயே கைது இடம்பெற்றுள்ளது.

குறித்த மாணவர்களின் கைதானது இந்த நாட்டில் இருக்கும் அனைத்து தமிழ் மக்களின் குரல் வளையை நசிப்பதற்கான திட்டமிட்ட செயல் போன்றதாக உள்ளது.

கல்வியால் உயர்வோம் என்ற தமிழ் மக்களின் தற்போதைய இலக்கை சீர்குலைக்கும் வகையில் பல்கலைக்கழக மாணவர்களை கைது செய்வதானது நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையை திசைதிருப்பும் செயற்பாடாகவே பார்க்கத் தோன்றுகின்றது. என்றுள்ளது. (ஐ-40)

---

குண்டுத் தாக்குதல்களினது எதிரொலி:

# மாலைதீவு மாணவர்கள் இங்கிருந்து வெளியேற்றம்

கொழும்பு, மே 9

இலங்கையில் கல்வி கற்று வந்த மாலைதீவைச் சேர்ந்த மாணவர்கள் தமது நாட்டுக்குத் திரும்பி கல்வியைத் தொடர விரும்புவதாக, மாலைதீவு நாட்டின் முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சர் துன்யா மௌமூன் தெரிவித்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற தொடர்தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டிருந்தனர். தற்கொலைத் தாக்குதலின் பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைகள் இறுக்கமடைந்திருந்தாலும், அச்சமான சூழல் தலைநகர் கொழும்பில் நிலவி வருகின்றது.

மாலைதீவைச் சேர்ந்த மாணவர்கள் கொழும்பில் கல்வி கற்று வருகின்றனர். அவர்கள் இலங்கையிலிருந்து வெளியேறி தமது நாட்டில் கற்றல் நடவடிக்கையைத் தொடர விரும்புவதாகவும், அதற்கு அனுமதி வழங்குமாறு மாலைதீவுப் பாடசாலைகளைக் கோரியுள்ளதாகவும், துன்யா மௌமூன் கூறியுள்ளார். (ஒ.5.61)

---

# ஐஸ் போதைப் பொருளை கடத்தியவருக்கு மறியல்

கொழும்பு, மே 9

ஐஸ் போதைப் பொருளை மறைத்துக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடமிருந்து 2 கிலோக் கிராமுக்கும் அதிக நிறையுடைய போதைப்பொருளை மீட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு 11.15 அளவில் சென்னை வானூர்தி நிலையத்திலிருந்து கொழும்புக்கு வந்திருந்த வானூர்தியிலேயே சந்தேக நபர் வந்துள்ளார்.

வானூர்தி நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

அதன்போதே போதைப் பொருள் மீட்கப்பட்டது.

கொழும்பு வத்தளை மாபொல பகுதியைச் சேர்ந்த மொஹமட் ஹசான் மொஹமட் அக்ரம் என்பவரே (வயது - 68) கைது செய்யப்பட்டார் என்பது அவரது ஆவணங்கள் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நீர்கொழும்பு நீதிவான் மன்றில் அவர் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டபோதே மறியலுக்கு உத்தரவிடப்பட்டது. (து-71)

---

# கல்கிஸ்ஸயில் இந்தியவர் கைது

கொழும்பு, மே 9

கல்கிஸ்ஸ பகுதியில் நுழைவிசைவு இன்றி தங்கியிருந்தார் என்ற குற்றச்சாட்டில் இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு தமக்கு கிடைத்த தகவலுக்கமைய அந்தப் பகுதியில் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது. நாட்டின் குடிவரவு குடியகல்வு சட்டத்துக்குப் புறம்பாக வீசா இன்றித் தங்கியிருந்தார். என்று தெரிவிக்கப்பட்டது. (து-71)

---

# தலைவர்களின் மோதலால் நிர்வாகச் செயற்பாடு வீழ்ச்சி

## சாடுகிறார் காமினி லொகுகே எம்.பி.



அரச தலைவர் மைத்திரிபால ஒருபுறம், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஒருபுறம் என்று நாட்டில் இரண்டு அரசுகள் செயற்படுகின்றன. அரச நிர்வாகங்களையும் அவர்கள் இஷ்டப்படி முன்னெடுத்தனர். இதனால் நாட்டின் நிர்வாகச் செயற்பாடுகள் வீழ்ச்சி கண்டுள்ளன. இவ்வாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே தெரிவித்தார்.

மகிந்த அரசின் காலத்தில் தான் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்கள் வலுப்பெற்றதாக ஆளும் கட்சியினர் சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பயங்கரவாதப் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 5 ஆண்டுகளின் பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை நாட்டில் எவ்வித பயங்கரவாத அமைப்புக்களும் தலைதூக்கவில்லை. பன்னாட்டுச் சமூகமும் நாட்டின் உள்ளக இறையாண்மையில் தலையிடவில்லை.

நாட்டுக்கு உதவி செய்வதாக குறிப்பிடும் அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் அரசு தொடர்புகளை வைத்துக் கொண்டது. கடந்த 21ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் தற்போது பகிரங்கப்படுத்தப்படுகின்றன. தவ்ஹீத் ஜமாத் போன்ற அடிப்படைவாத அமைப்புக்கள் தீவிரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டமை தொடர்பில் பாதுகாப்பு தரப்பினருக்குத் தொடர்புடையவர்கள் அறிவித்தும் அரசு எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

இலங்கையில் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்த எத்தணித்துள்ளதாக இந்தியப் புலனாய்வுப் பிரிவு திகதி மற்றும், இடத்தையும் குறிப்பிட்டும் அரசு கவனத்தில் கொள்ளாதது ஏன்? தேசிய பாதுகாப்பு சபைக்கு தலைமை அமைச்சரையும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரையும் அழைக்காமை தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்ட கருத்து பொருத்தமற்றது.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படும் என்ற காரணத்தால் தலைமை அமைச்சரை அழைக்கவில்லை என்று குறிப்பிடுவது அரசின் செயலொழுங்கினை வெளிப்படுத்துகின்றன.

தலைமை அமைச்சருக்குப் பொறுப்பான அமைச்சில் அரச தலைவர் தலையிட முடியாது. அரச தலைவருக்குப் பொறுப்பான அமைச்சில் தலைமை அமைச்சர் தலையிட முடியாத நிலை காணப்படுகின்றது. இவ்விருவரது போட்டித்தன்மையும் இன்று தேசிய பாதுகாப்பையும், நாட்டையும் முழுமையாக பலவீனப்படுத்தியுள்ளது. நிலையான அரசு விரைவாக தோற்றுவிக்கப்பட வேண்டும். 19ஆவது அரசமைப்பு ஊடாக அரச செயற்பாடுகளில் காணப்படுகின்ற சிக்கல்கள் அனைத்தும் இல்லாதொழிக்கப்படவேண்டும் - என்றார். (ஒ.5.61)

---

# மாணிக்கக் கல் அகழ்ந்தவர் உயிரிழந்தார்

கொழும்பு, மே 9

இரத்தினபுரி நிவித்திகலை பகுதியில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டவர் அந்தக் குழியில் வீழ்ந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நிவித்திகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொலஸ்வலை பகுதியில் கடந்த திங்கட்கிழமை சம்பவம் இடம்பெற்றது.

இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த மலவிசூரியகே துமிந்த மலவிசூரிய (வயது - 42) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-71)

---

# வாள்களுடன் சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, மே 9

காலி மாவட்டத்தின் ரத்கம பகுதியில் 8 வாள்களுடன் இரண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாகவும், அவர்களில் ஒருவர் பெண் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த திங்கட்கிழமை நடத்திய சோதனை நடவடிக்கைகளின்போதே 8 வாள்களையும் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், இவற்றை உடமையில் வைத்திருந்த இருவரையும் கைது செய்துள்ளதாகக் குறிப்பிட்டனர்.

கைதான சந்தேகநபர்களுக்கு எதிராக பல்வேறு முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் ஏற்கனவே பதிவாகியுள்ளன என்றும் பொலிஸார் கூறினர். (ஒ.5.71)

---

# இலங்கையில் அமைதியை விரும்பாத வெளிச்சக்தியே தாக்குதல் நடத்தியது

## கண்டறியவேண்டும் என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, மே 9

இலங்கையில் அமைதியை விரும்பாத வெளிச்சக்தியொன்று இருக்கின்றது. இலங்கையிலுள்ள சிறு கும்பலுக்கு பின்னணியில் இருக்கும் அந்த வெளிநாட்டுச் சக்தியை அடையாளம் காணவேண்டும். இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை, பயங்கரவாத தாக்குதலையடுத்து சுற்றுலாத் துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மதத்தின் பெயரால் மேற்கொண்ட இந்தத் தாக்குதலை சிறியதொரு கும்பலே முன்னெடுத்துள்ளது. இந்தச் சிறிய கும்பலை பரவவிடாமல் தடுப்பதை தவிர வேறு வழி எமக்கில்லை. இவர்களின் நோக்கம் என்ன? மார்க்கத்தில் இல்லாத விடயத்தை முன்னிலைப்படுத்திக்கொண்டு மேற்கொண்ட இந்தச் செயலால் அவர்களின் உடலைக்கூட மார்க்கத்தின் அடிப்படையில் நல்லடக்கம் செய்ய முடியாத நிலைக்குச் சென்றிருக்கின்றது.

விடுதலைப்புலிகள் தனி நாட்டுக் கோரிக்கையுடன் போரிட்டனர். அவர்களின் இயக்கத்தை அழித்ததுடன் விடுதலைப்புலிகளின் போராட்டம் முடிவுக்கு வந்தது. தற்போது குண்டுத்தாக்குதலை மேற்கொண்ட சிறிய கும்பலுக்கு பின்னால் வெளிச்சக்தி இருப்பதை காண்கின்றோம். முஸ்லிம் சமூகத்தில் இவர்களுக்கு ஆதரவாகப் பேசக்கூடியவர்கள் எவரும் இல்லை. இஸ்லாமிய உலகத்தை உருவாக்குவதாக தெரிவித்து உள்நாட்டில் தனது குடும்பத்தை மாய்த்துக் கொண்டிருப்பது எவ்வளவு மடமைத்தனம் என்பதை காணலாம். இந்தக் கும்பலை யாரோ பயன்படுத்தி இருக்கின்றார்கள். அதனைக் கண்டுபிடிக்கவேண்டும். மாறாக நாட்டுக்குள் மாத்திரம் சோதனைகளை மேற்கொண்டு ஒருசிலரை கைதுசெய்து அவர்களை மறுவாழ்வுக்கு அனுப்புவதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியாது.

முஸ்லிம் சமூகம் உச்சகட்ட பொறுமையுடன் பாதுகாப்பு பிரிவுக்கு ஆதரவளித்து வருகின்றது. இந்தச் சம்பவத்தை பயன்படுத்திக்கொண்டு முஸ்லிம் சமூகத்தின் கலாசாரத்தை ஒழிக்க சிலர் முற்பட்டு வருகின்றார்களா என்ற சந்தேகம் முஸ்லிம் மக்கள் மத்தியில் இருந்து வருகின்றது. முஸ்லிம் பெண்கள் முகத்தை மறைத்து ஆடை அணிவதை நிறுத்தியுள்ள நிலையில் அவர்கள் தலையை மறைத்து அவர்களின் ஆடைகளை அணிந்து செல்லும்போது அதற்கு பல இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இவை நிறுத்தப்படவேண்டும் - என்றார். (ஒ.5.31)

# இராணுவச் சீருடைகள் சிலவுடன் நேற்றுமுன்தினம் ஒருவர் கைது!

கொழும்பு, மே 9

பொகவந்தலாவ சிறிபுர பகுதியில் உள்ள வீடுஒன்றிலிருந்து இராணுவத்தினரின் சீருடைகள் சில நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதனுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொகவந்தலாவ சிறிபுர பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர். (கு)



தொடர் குண்டுத் தாக்குதல்களைப் பொறுத்தவரையில் அதனை திட்டமிட்டு நடத்தியவர்கள், அவர்களுக்கு உதவி வழங்கியவர்கள் அனைவரும் குற்றவாளிகள். அதேவேளை, இத் தாக்குதல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் முன்னெச்சரிக்கைத் தகவல்கள் கிடைக்கப்பெற்றபோதிலும் அதற்கெதிராக நடவடிக்கை மேற்கொண்டு இந்த அழிவைத் தடுக்கத் தவறியவர்களும் குற்றவாளிகளேயாவர்.

இந்த நிலையில் இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்தல், விசாரணை செய்தல், சந்தேகத்தக்கிடமான பகுதிகளை சோதனைக்கு உட்படுத்துதல் உள்ளிட்ட அதிகாரங்கள் பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதனுடன் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று கருதக் கூடாது. இந்தப் பிரச்சினை வளர்ச்சியடைவது முஸ்லிம் சமூகத்திற்குள்ளேயாகும். ஆயுதங்களை விடவும், தனிநபர்களை விடவும் இந்தப் பயங்கரவாதிகள் முன்னிறுத்து கின்ற மதவாதம் ஆபத்தானது. அதற்கெதிராக தற்போது முஸ்லிம் சமூகத்துக்குள்ளிருந்து எதிர்ப்புக்குரல்கள் எழுகின்றன.

எனவே இத்தகைய தீவிரவாதத்தைப் பாதுகாத்து, அதனை வளர்ப்பதா அல்லது அதனை முற்றாக இல்லாதொழிப்பதா என்பது தொடர்பில் நாம் தீர்மானிக்க வேண்டும். முஸ்லிம் அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் முஸ்லிம் சமூகத்தினருக்கு இதனை முற்றாக இல்லாதொழிப்பதில் பெரும் பொறுப்புண்டு. அதேபோன்று ஒரு அடிப்படைவாதக் கொள்கையின் ஊடாகவே மற்றொரு அடிப்படைவாதம் போதிக்கப்படுகின்றது. எனவே இத்தகைய அடிப்படைவாத செயற்பாடுகளை வேறொரு அடிப்படைவாத செயற்பாட்டினால் ஒருபோதும் தோற்கடிக்க முடியாது. எனவே எவ்விதத்திலும் இனம் மற்றும் மதம் சார்ந்த அடிப்படைவாதமோ, தீவிரவாதமோ நாட்டில் ஏற்படாதவாறு பேணுவதன் ஊடாகவே இதனைத் தோற்கடிக்க முடியும்.

நாட்டிலுள்ள அனைவரும் ஒற்றுமையாக செயற்படுவதன் மூலமும், அனைத்து இனத்தவரினதும் உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலமுமே எந்தவொரு பயங்கரவாத செயற்பாட்டையும் முழுமையாகத் தோற்கடிக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். எனவே இவ்விடயத்தை நாங்கள் ஒருபோதும் அரசியல் சுயலாபம் பெறும் நோக்கில் பயன்படுத்திக்கொள்ள மாட்டோம். இந்தத் தாக்குதல் சம்பவத்தின் ஊடாக தேசிய பாதுகாப்பின் உறுதிப்பாட்டிற்கு தேசிய ஒற்றுமை அவசியமானது என்ற விடயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. சமூகங்களுக்கிடையில் பிளவு காணப்படுமானால் எவ்வளவு தூரம் பாதுகாப்பைப் பலப்படுத்தினாலும், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினாலும் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாது. எனவே தேசிய ஒற்றுமையே தேசிய பாதுகாப்பின் அடிப்படையாகும். அதனை மையப்படுத்தியதாகவே எமது செயற்பாடுகள் அமைந்துள்ளன - என்றார். (ம-61)

## இரு...

பாதுகாப்புப் பிரிவு வீழ்ச்சிக்குக் காரணம் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா. அத்துடன் இஸ்லாம் மதத்தின் பெயரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அடிப்படைவாதத்தை இல்லாமலாக்க முஸ்லிம் மக்கள் முன்வரவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற 'பயங்கரவாதத் தாக்குதலையடுத்து சுற்றுலாத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள்' குறித்த சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

பாதுகாப்புப் பிரிவை உறுதிப்படுத்தி அடிப்படைவாதத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதுபோல் அடிப்படைவாதத்துடன் சம்பந்தப்பட்டவர்களின் மனதை மாற்றுவதன் மூலம் கட்டுப்படுத்தவேண்டும். தற்போது இஸ்லாத்தின் பெயரால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அடிப்படைவாதத்தை கட்டுப்படுத்த முஸ்லிம் மக்கள் முன்வரவேண்டும். அதில் தற்போது முன்னேற்றத்தை கண்டு வருகின்றோம். முஸ்லிம் மக்கள் அடிப்படைவாதத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

என்றாலும் நாட்டில் இடம்பெற்ற இந்த பேரழிவை சிலர் அரசியலுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். அதேபோன்று சில ஊடகங்களும் இதற்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றன. நாட்டில் இன்று ஊடக சுதந்திரம் போதுமானளவு வழங்கப்பட்டிருக்கின்றது. அதனை பயன்படுத்தி நாட்டில் இவ்வாறான பேரழிவுகள் இடம்பெறும்போது சமூக வலைத்தளங்கள் செயற்படும் முறை கவலையளிக்கின்றது. அதனால் இவ்வாறான நிலைமைகளில் செயற்படுவதற்கு ஊடகங்களுக்கு சிறப்புச் சட்ட திட்டங்களை ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன் அரசமைப்பின் 19ஆம் திருத்தம் காரணமாகவே பாதுகாப்பு பிரிவு வீழ்ச்சியடைந்திருக்கின்றது. 19 ஊடாக இரண்டு அதிகார முனைகள் அமைக்கப்பட்டன. அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோருக்கு அதிகாரங்கள் பிரித்து வழங்கப்பட்டதால் தீர்மானங்கள் எடுப்பதில் தாமதம் ஏற்படுகின்றது - என்றார். (ம-31)

## சமூகங்களுக்கு...

பயன்படுத்தினாலும் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாது. என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக்காரியலயத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களுக்கும், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம் சிவில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களுக்கும் இடையில் நேற்று புதன்கிழமை சந்திப்பொன்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அனுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற

## இரட்டைக்...

சேர்ந்த றொசான் பர்ணாந்து குடும்பத்தார் மன்னாரிலுள்ள பெரியகமம் பகுதியிலுள்ள தங்கள் உறவினர் வீட்டுக்குச் சென்று அங்கு ஒருசில தினங்கள் தங்கியிருந்துள்ளனர்.

கடந்த செவ்வாய் கிழமை பிற்பகல் றொசான் பர்ணாந்து என்பவரின் இரட்டைப் பிள்ளைகள் பக்கத்து வீடாகிய தங்கள் மாமியாரின் வீட்டு வளவுக்குள் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் இரண்டு பிள்ளைகளில் ஒருவரை காணாது பெற்றோர் உட்பட உறவினர்கள் தேடியபோது றொசான் சஞ்சேய் பர்ணாந்து (வயது - 02) என்ற குழந்தை கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்தமை தெரியவந்தது.

இறப்புத் தொடர்பான விசாரணையை மன்னார் மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா மேற்கொண்டார். அவர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்து குழந்தையின் சடலம் பேசாலை சேமக்காலையில் நேற்று புதன்கிழமை அடக்கம் செய்யப்பட்டது. (ம-60)

## எதிர்வரும்...

பயங்கரவாதிகளில் 150 பேரில் 50 பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அரச தலைவர் தெரிவித்தார். அப்படியாயின் இன்னும் 100 பயங்கரவாதிகள் இருக்கின்றனர். இது மிகவும் எச்சரிக்கையான நிலையாகும். உளவுத்துறை பலவீனமடைந்ததால்தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக சிலர் விமர்சித்து வந்ததனர். உளவுத்துறையில் சிலர் நீக்கப்படுவதன் மூலம் உளவுத்துறை பலவீனமடையவில்லை. மாறாக உளவுத்துறையை தொழிநுட்ப ரீதியில் பலப்படுத்தவில்லை என்பதே உண்மை.

மேலும் இந்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு பொலிஸ்மா அதிபர் மற்றும் பாதுகாப்பு செயலர் பதவி விலகியமையை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் பாதுகாப்பு செயலர் எனக்கு நன்கு தெரிந்தவர். பாதுகாப்பு செயலர் என்றவகையில் தாக்குதல் தொடர்பாக தகவல் கிடைத்ததை நான் அரச தலைவருக்குத் தெரிவிக்காமல் இருப்பேனா என்று அவர் என்னிடம் தெரிவித்தார். அதேபோன்று தாக்குதல் எச்சரிக்கை இருப்பது தொடர்பாக பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்கள் 15 தடவைக்கும் மேல் அரச தலைவருக்குத் தெரிவித்தனர் என்றும் அப்போதெல்லாம் அரச தலைவர் கண்டுகொள்ளாமல் இருந்தார் என்று பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழே நான் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்தேன். அந்த சட்டத்தில் குறைகள் இருக்கின்றமையாலே அந்த சட்டத்துக்கு கீழ் என்னை கைது செய்து சிறையில் அடைக்க முடியுமாகியது. அதனால் தற்போதுள்ள நிலையில் அரசியல் லாபம் கருதிச் செயற்படாமல் நாடுதொடர்பாக அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலமே இந்த பிரச்சினையில் இருந்து மீள முடியும் - என்றார். (ம-22)

## பல்கலை....

வழங்க சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கவில்லை. அதனால் யாழ்ப்பாண நீதிவான் மன்று நேற்றுப் பிணை வழங்கவில்லை.

'இந்த வழக்குத் தொடர்பான விடயங்களைச் சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்கிறது. அதனால் பிணை வழங்க முடியாது' என்று நீதிவான் ஏ.எஸ்.பி.போல் மன்றில் தெரிவித்தார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினர், பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து தேடுதல் நடத்தினர். மாணவர் ஒன்றிய அலுவலக அறையிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் உருவப் படமும் உணவகத்தில் தியாக தீபம் திலீபனின் உருவப்படமும் மீட்கப்பட்டன.

இதனையடுத்து மாணவர் ஒன்றியத்தின் தலைவரும் செயலரும் உணவகத்துக்கு உணவு வழங்கும் ஒருவரும் படையினரால் கைது செய்யப்பட்டனர். பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலத் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்து யாழ்ப்பாண நீதிவானிடம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கோப்பாய் பொலிஸார் முற்படுத்தினர். அவர்கள் சார்பில் மூன்று சட்டத்தரணிகள் முன்னிலையாகி பிணை விண்ணப்பம் செய்தனர். பொலிஸார் அதற்கும் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர். இரு தரப்பு வாதங்களையும் ஆராய்ந்த நீதிவான் மூவரையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

கடந்த திங்கட்கிழமை மூவர் சார்பிலும் சட்டத்தரணிகள் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டனர். மூவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் பிணை விண்ணப்பம் செய்திருந்தனர். அது தொடர்பிலான கட்டளை புதன்கிழமை (நேற்று) வழங்கப்படும் என்று நீதிவான் திகதியிட்டிருந்தார். அதனடிப்படையில் கட்டளைக்காக நீதிமன்றில் நேற்று வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலை நீதிவான் மன்றில் தெரிவித்தார்.

இதேவேளை, 'சட்டமா அதிபரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் உயர் நீதிமன்றம் வரை சென்று மாணவர்களுக்காக நீதிப் போராட்டம் நடத்துவோம்' என்று இந்த வழக்கில் வாதாடும் சட்டத்தரணிகளில் ஒருவரான க.சுகாஸ் தெரிவித்தார்.

மாணவர்களுக்குப் பிணை விண்ணப்பம் மறுக்கப்பட்டமை தொடர்பில் அவர் ஊடகங்களிடம் தெரிவிக்கையில், 'எமது பிணை விண்ணப்பம் தற்காலிகமாக மறுதலிக்கப்பட்டுள்ளது. விரைவில் சட்டமா அதிபரின் சாதகமான அறிக்கை கிடைக்க பெறும் என்று நம்புகின்றோம். கிடைக்கப் பெறாதுவிடின் உயர் நீதிமன்றம் போகக்கூட தயங்கமாட்டோம். மாணவர்களுக்கான நீதிப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம்' என்றார். (கு-37)

## வவுனியா...

தொடர்பான கலந்துரையாடல் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாகிஸ்தான் மற்றும்; ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்து வேறு நாடுகளுக்கு போவதற்காக ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொண்டுவிட்டு காத்திருப்போர் நீர்கொழும்பில் தங்கியிருந்ததாகவும் தற்போது நடந்த பயங்கரவாத தாக்குதலின் பின்னர் அவர்கள் வசித்த வீட்டில் இருந்து வீட்டு உரிமையாளர்கள் வெளியேற்றியிருப்பதனால் அவர்கள் தற்போது நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் தங்கியுள்ளனர். அவர்களை தற்காலிகமாக வெள;வேறு பிரதேசங்களில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்ன் பிரகாரம் வவுனியாவில் தற்போது மறுவாழ்வு நிலையம் இயங்கி வரும் கூட்டுறவு பயிற்சி கல்லூரியில் 169 பேரை குறுகிய காலத்துக்குத் தங்க வைப்பதற்கு பரிசீலிக்கப்பட்டது. நாம் அவரிடம் கூட்டுறவு பயிற்சி கல்லூரி என்பது வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவு அலுவலர்களுக்கு தமிழ் மொழியில் பயிற்சிகளை நடத்துவற்கான ஒரேயொரு பயற்சி கல்லூரியாகும். 10 வருடங்களாக அது விடுவிக்கப்படாமல் உள்ளது. அகதிகளை மீண்டும் குடியேற்றினால் குறித்த கட்டடத்தை விடுவிப்பதில் தாமதமாகும். ஆகவே அதை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்தோம் - என்றார்.

குறித்த கலந்துரையாடலின்போது செய்தியாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-110,105)

## நீதிமன்றத்தால்...

தெரிவித்தார்.

குறித்த அறிக்கைக்கு தேவையான அனைத்து சோதனைகளும் நிறைவடைந்துள் ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அகழ்வின்போது மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தவிர்ந்த ஏனைய பொருள்கள் நீதிமன்ற அனுமதியின் பேரில் மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன. இது குறித்து எதிர்வரும் 10ஆம் திகதி (நாளை) நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கவுள்ளதாகவும் பேராசிரியர் தெரிவித்துள்ளார். அறிக்கையை வழங்கியதன் பின்னர் அகழ்வுப்பணிகளை தொடர்வ்தா இல்லையா என்பது தொடர்பில் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் என ராஜ் சோமதேவ குறிப்பிட்டுள்ளார். கடந்த வருடம் மார்ச் மாதம் மன்னார் சதொச கட்டட நிர்மாண நடவடிக்கைகளுக்காக நிலத்தைத் தோண்டியபோது மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அகழ்வுப் பணிகளின்போது மீட்கப்பட்ட மனித எச்சங்களின் மாதிரிகள் அமெரிக்காவின் பீட்டா நிறுவனத்துக்குச் சோதனைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டன. இதன்போது குறித்த மாதிரிகள் 350 முதல் 600 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்துக்குரியவை என அமெரிக்காவின் பீட்டா நிறுவனத்தினால் கால எல்லை நிர்ணயிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் குறித்த முடிவை ஏற்றுக்கொள்ளாத பலர் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து எலும்பு மாதிரிகளும் தனித்தனியாக சோதிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். (ம-56)

# வளங்களை அபகரிக்கவே அமெரிக்கா போர் மிரட்டல்

## வெனிசுலா அதிபர் தெரிவிப்பு

காரகஸ்,மே 9

வெனிசுலாவின் தங்கம், வைரம், பெட்ரோல் கிணறுகள் உள்ளிட்ட வளங்களை அபகரிப்பதற்காகவே அமெரிக்க அதிபர் ட்ரம்ப் போர் மிரட்டல் விடுத்துள்ளதாக அந்த நாட்டின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ தெரிவித்தார்.



ஆனால், வெனிசுலா மக்கள் எதையும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். ட்ரம்பின் இந்தப் பைத்தியக்காரத்தனமான நோக்கத்தை அனைத்து வகைகளிலும் கண்டித்து, தடுத்து நிறுத்த உலக நாடுகள் முன்வர வேண்டும் எனவும் மதுரோ தெரிவித்தார்.

**பின்னணி**

அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடிய வெனிசுலாவின் அதிபர் சாவேஸுக்குப் பின்னர் வெனிசுலாவின் அதிபராக நிக்கோலஸ் மதுரோ தெரிவானார். வெனிசுலாவில் பொருளாதார நெருக்கடி ஆரம்பித்து, மக்கள் வறுமையில் வாடினர். அரசுக்கு எதிரான போராட்டங்களை ஆரம்பித்தனர்.

பின்னர் கடந்த ஆண்டு மறுபடியும் மதுரோவே அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார். வெனிசுலாவின் எதிர்க்கட்சி, இந்தத் தேர்தல் முடிவை ஏற்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் ஜுவான் குவைடோ, தன்னை இடைக்கால அதிபராக அறிவித்தார்.

அமெரிக்கா அவருக்கு ஆதரவளிக்கிறது. வெனிசுலா அரசின் பொருளாதார நலிவால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினரும் குவைடோவுடன் இணைந்து வெனிசுலா அரசுக்கு எதிராகப் போராட்டங்கள், வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்.

குவைடோவை அமெரிக்கா உள்ளிட்ட 54 நாடுகள் ஆதரிக்கும் நிலையில், மதுரோ தலைமையிலான வெனிசுலா அரசை ரஷ்யா, சீனா, பொலிவியா, துருக்கி உள்ளிட்ட சில நாடுகள் ஆதரிக்கின்றன. குவைடோ முன்னெடுத்து வரும் அரசைக் கவிழ்ப்பதான நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்த வண்ணம் இருக்கின்றன.

வெனிசுலா நிலவரங்களைத் தீவிரமாகக் கண்காணித்து வருவதாகவும் இராணுவ நடவடிக்கைகளை எடுக்க அமெரிக்கா தயாராக உள்ளது என்றும் அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ தெரிவித்தார்.

வெனிசுலா விவகாரத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்கான சாத்தியம் உள்ளது. அதுதான் தேவை என்றால், அமெரிக்கா இராணுவ நடவடிக்கைகளை எடுக்கும் இதுவே அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் நிலைப்பாடு என்றும் மைக் பாம்பியோ குறிப்பிட்டார்.

'நம் நாட்டின் மீது படையெடுக்க துடிக்கும் அமெரிக்காவின் மூர்க்கத்தனத்துக்குப் பதிலடி கொடுக்கத் தயாராக இருங்கள்' என மதுரோ தனது இராணுவத்துக்கு உத்தரவிட்டார்.

# அமெரிக்கா – சீனா மோதல் போக்கு உலக பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தல்

## பன்னாட்டு நிதியம் எச்சரிக்கை

பாரிஸ்,மே 9

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் நடந்துவரும் வரிவிதிப்புத் தொடர்பான மோதல் போக்கு உலகப் பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்து வருகின்றது எனப் பன்னாட்டு நிதியம் தெரிவித்தது. பிரான்ஸ் தலைநகர் பாரிசில் செய்தியாளர்களிடம் பேசியபோதே பன்னாட்டு நிதியத்தின் தலைவர் கிறிஸ்டைன் லகார்டே, 'அமெரிக்கா, சீனா இடையில் வரிவிதிப்பு தொடர்பாக அதிகரித்துவரும் மோதல் போக்கு உலக பொருளாதாரத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்' என்று குறிப்பிட்டார்.

**பின்னணி**

அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே வர்த்தகப் போர் நடந்து வருகிறது. இந்த இரண்டு நாடுகளும் இறக்குமதி வரியை உயர்த்தி வருகின்றன. ஒரு கட்டத்தில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்வந்த இந்த இரண்டு நாடுகளும் பேச்சுக்களை முன்னெடுத்தாலும் அவை மிக மெதுவாகவே நடக்கின்றன.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 10 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக வரியை அமெரிக்கா உயர்த்தியது. இதன் மூலம் சீனப் பொருள்களுக்கு ரூ.14 ஆயிரம் கோடி இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நேற்று முன்தினம் அறிவித்தார்.

இந்தப் பிரச்சினை குறித்துப் பேச்சுகள் நடந்து வரும் நிலையில், சுமார் 20 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான இந்தப் புதிய வரிவிதிப்பு எதிர்வரும் 10ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது.



# ஆஸி. தலைமை அமைச்சர் மீது முட்டை வீச்சு

சிட்னி,மே 9

ஆஸ்திரேலியாவில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட அந்த நாட்டின் தலைமை அமைச்சர் மீது பெண் ஒருவர் முட்டையை வீசினார். இந்தச் சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஆஸ்திரேலியாவில் எதிர்வரும் 18ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கிறது. அதில் போட்டியிடும் தனது கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் ஸ்கொட் மொரிசன் நியூசவுத்வேல்ஸ் பகுதியில் அல்பரி என்ற இடத்தில் கிராமப்புறப் பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது 25 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் மொரிசனின் தலையில் முட்டையை வீசினார். ஆனால் அந்த முட்டை மொரிசனின் தலையில் உடையவில்லை. தரையில் விழுந்து நொருங்கியது. உடனே மொரிசனுக்குப் பாதுகாப்பளித்த பொலிஸார் அந்தப் பெண்ணைக் கைது செய்தனர். விசாரணைக்குட்படுத்தினர்.

# ட்ரம்ப் போன்று முகமூடி அணிந்து ஆஸ்திரேலியாவில் தொடர் திருட்டு

குயின்லாந்து,மே 9

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் முக வடிவிலான முகமூடியை அணிந்து இளைஞர் ஒருவர் ஆஸ்திரேலியாவில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டார். அது குறித்த காணொலி இணையத்தில் பரவி வருகிறது. ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்துப் பகுதியில் 20 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரே கடையை உடைத்து இவ்வாறு திருட்டில் ஈடுபட்டார். நகைக்கடை ஒன்றின் கதவைச் சுத்தியல் போன்ற சாதனத்தால் உடைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த கைக்கடிகாரங்களைத் திருடினார். அத்துடன் மின்சாதனக் கடை ஒன்றின் கண்ணாடிக் கதவுகளையும் உடைத்தார். அங்கிருந்தும் விலை மதிப்புள்ள சில பொருள்களறைத் திருடிச் சென்றுள்ளார். என்று கூறுகின்ற குயின்ஸ்லாந்துப் பொலிஸார் இதுகுறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



# பிணை மனு நிராகரிப்பு ஷெரிப்புக்குத் தொடர் சிறை

லாகூர்,மே 9

ஊழல் மோசடி வழங்கில் சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்ற பாகிஸ்தானின் முன்னாள் தலைமை அமைச்சர் நவாஸ் ஷெரீப் தனக்குப் பிணை கோரித் தாக்கல் செய்த மனுவை அந்த நாட்டு நீதிமன்றம் நிராகரித்தது. இதனால் அவர் மீண்டும் சிறைக்குத் திரும்ப உள்ளமை உறுதியாகியுள்ளது. சிறையிலடைக்கப்பட்டிருந்த அவர் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் நாட்டை விட்டு வெளியேறக் கூடாது என்ற நிபந்தனையுடன் கடந்த மார்ச் மாதம் ஆறு வார காலங்களுக்குப் பிணை வழங்கி அவரைச் சிறையிலிருந்து விடுவித்தது பாகிஸ்தானின் உயர் நீதிமன்றம்.



இந்த நிலையில் சிகிச்சைக்காகத் தான் வெளிநாட்டுக்குச் செல்ல வேண்டும் என்று கூறி நிரந்தரப் பிணை வழங்குமாறு கோரி நவாஸ் ஷெரீப் உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார். அவரது இந்த மனுவை நீதிமன்றம் நிராகரித்தது.

அவருக்கு ஏலவே வழங்கப்பட்ட பிணைக் காலம் முடிவடைவதால் கோட் லாக்பாத் சிறைக்குத் திரும்ப வேண்டும் என்றும் பணித்தது.

# லாகூரில் குண்டுவெடிப்பு; 8 பேர் சாவு, பலர் காயம்

லாகூர்,மே 9

பாகிஸ்தானின் தலைநகர் லாகூரின் கிழக்குப் பகுதியில் இருந்த மசூதியில் நேற்று நடந்த குண்டு வெடிப்பில் 8 பேர் சாவடைந்தனர். 10க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். லாகூர் நகரில் உள்ள 'சூவ்பி' (இஸ்லாமியர்களில் ஒரு வகையினரைக் குறிப்பது) வழிபாட்டுத் தலத்திலேயே இந்தக் குண்டு வெடிப்பு நடந்தது. இது குறித்து விசாரணை நடந்து வருவதாக லாகூர் பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலுக்கு உள்ளான குறித்த வழிபாட்டுத் தலம் தென் ஆசியாவிலேயே உள்ள பெரிய வழிபாட்டுத்தலங்களில் ஒன்று என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. பாகிஸ்தானில் 'சூவ்பி' வழிபாட்டாளர்கள் தாக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.



# கடும் பஞ்சம் காரணமாக நமீபியாவில் அவசரநிலை

விண்டோஹ்,மே 9

தென்மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நமீபியாவில் கடுமையான பஞ்சம் நிலவுவதால் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அவசரநிலைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.




ஆபிரிக்காக் கண்டத்தில் தென்மேற்காகஉள்ளநமீபியாவில்சுமார் 25 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். தனிநபர்வருமானத்திலும்பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கிய நிலையில்உள்ளஅங்குபருவமழை பொய்த்துப்போகும்காலங்களில்கடுமையானபஞ்சம்மற்றும்பசி,பட்டினியால் மக்கள் திண்டாடுவது தவிர்க்க முடியாததாக உள்ளது. இந்த ஆண்டும் போதிய அளவில் பருவமழை பெய்யவில்லை. இதனால் மக்களுக்கு தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அவசரநிலைச் சட்டத்தை அந்த நாட்டின் அதிபர் ஹகே ஜிய்ன்கோப் அறிவித்தார். நாடு முழுவதும் கால்நடைகள் மற்றும் வளர்ப்புப் பிராணிகள் தொடர்பாகவிரிவானகணக்கெடுப்பு நடுத்துமாறு அரச அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. நமீபியா இந்த முறை கடும் வறட்சியைச் சந்தித்துள்ளது. அங்குபெரும்பாலனநிலம் மணல் பரப்பாக இருப்பதால் விவசாய நடவடிக்கைகள் சாத்தியப்படுவதில்லை. 5இலட்சம் மக்கள்பட்டினியால்வாடுவதாகவும், 60ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் நீரின்றிச் சாவடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. நமீபிய மக்கள் உணவுக்கு வேறு வழியின்றி அரசின் நிவாரணத்தையே எதிர்பார்த்தபடி இருப்பதால், அந்த நாட்டின்அதிபர்,பன்னாட்டுச்சமூகங்களின் உதவியை நாடியுள்ளார்.













அமெரிக்காவில் நடந்த 'மெட் கலா' 2019 எனும் நிகழ்வு இது. வித்தியாசமான ஆடைகளுடன் பலரும் வலம் வந்தனர்; காட்சியளித்தனர். நியூயோர்க்கில் இயங்கும் கல்வி நிறுவனத்துக்கு நிதி திரட்டும் நிகழ்ச்சியான இதில் திரைத்துறை நட்சத்திரங்கள் பங்கேற்பது வழமை.



## இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் வாழ்வில் பெற்ற வசதியை பெரிதென எண்ணுவீர்கள். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** சிலர், உங்களிடம் மாறுபட்ட கருத்துடன்பேசுவர். நிதானம்வேண்டும். தொழில், வியாபாரத்தில் சிறு அளவிலான சுணக்கம் ஏற்படும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும். வாகனத்தில்மிதவேகம்பின்பற்றுவதுநல்லது.

**மிதுனம்:** சத்தியத்தின் மீதான நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் சிறப்பாக முன்னேற்றம் காணப்படும். உபரி பணவருமானம் உண்டு.

**கடகம்:** செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேறும். பணவரவை விட செலவு அதிகரிக்கும். பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்ல வேண்டாம்.

**சிம்மம்:**மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். .தொழில் உற்பத்தி, வியாபார வளர்ச்சிக்கான பணிகள் எளிதாக நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** முக்கிய செயல்கள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரம் செழித்து புதிய சாதனை உருவாகும். கூடுதல் பணவருமானம் கிடைக்கும். வீடு, வாகனத்தில் கூடுதல் வசதி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள்.

**துலாம்:** உங்களின் சிரம சூழ்நிலை பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் சீர் பெற அதிகம் பணிபுரிவது அவசியம். பணச் செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது.

**விருச்சிகம்:** செயல்களில் சிறுஅளவிலான குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்; எதிர்பார்த்த பணவரவு கிடைக்க தாமதம் ஆகலாம்.

**தனுசு:** மஅன்றாட பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். தாராள பணவரவு கிடைத்து மனதில் மகிழ்ச்சி கூடும்.

**மகரம்:** தவறாக விமர்சித்த ஒருவர் உங்களிடம் அன்பு பாராட்டுவார். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற கிடைத்தவாய்ப்பைபயன்படுத்துவீர்கள்.

**கும்பம்:** நம்பிக்கையுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில் உற்பத்தி, வியாபார விற்பனை தாமத கதியில் இயங்கும்.

**மீனம்:** பொது இடங்களில், எவருடனும் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் அதிகரிக்கும். பணச்செலவில் சிக்கனம் கடைப்பிடிப்பது நல்லது.

# இன்றைய ஆட்டங்கள்

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக்கிண்ணத்துக்கான 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று வியாழக் கிழமை தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் சங்கனை யுனைட்ரெட் விளையாட்டுக்கழக அணி யை எதிர்த்து சென். பீற்றஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

*** ***

வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் 5 ஆவது ஆண்டாக நடாத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை மாலை தீருவில் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளங்கதிர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ரேவடி விளையாட்டுக்கழக பி அணியை எதிர்த்து சைனிங்ஸ் விளையாட்டுக்கழக ஏ அணி மோதவுள்ளது.

*** ***

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரின் அரையிறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ஒ.23)

## வதிரி சிறிமுருகன் வி.க. 7 ஓட்டங்களால் வெற்றி

### இறுதிக்குள் நுழைந்தது

யாழ்ப்பாணம், மே 9
ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணியை 7 ஓட்டங்களால் வீழ்த்தி இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது வதிரி சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி.
காரை சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் வதிரி சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய வதிரி சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சாள்ஸ் 14 ஓட்டங்களையும், கரி 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் சதீஸ் 3 இலக்குகளையும், ஜெனி ஓர் இலக்கையும் கைப்பற்றினார்.
51 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை மாத்திரம் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றனர். சதீஸ் 16 ஓட்டங்களையும், ஜெனி 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் வதிரி சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரணவன், உமாசுதன் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள். (ஒ.23)



# உரும்பிராய் திருக்குமரன் வி.க. இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது

யாழ்ப்பாணம், மே 9
ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம்.
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டு க்கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை மாலை 4.30 மணிக்கு அரையிறுதி ஆட்டம் இடம்பெற்றது.
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதியது.
ஆட்ட நேரத்துக்குள் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பதிவு செய்தன. சமநிலையில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.
வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது.
4:3 என்ற கோல் கணக்கில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

(ஒ.23)



## செ‌ன்.லூட்ஸ் அணியை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது யங்ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், மே 9
தெல்லிப்பழை நாமகள் விளை யாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக்கிண்ணத்துக்கான 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.
கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
இரண்டு அணிகளும் குறிக்கப்பட்ட ஆட்ட நேரத்தினுள் தலா இரண்டு கோல்களைப் பதிவு செய்தனர். ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.
4:3 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது. (ஒ.23)

## சேப்பாக்கம் ஆடுகளத்தை இன்னும் சிறந்தமுறையில் மதிப்பிட்டிருக்க வேண்டும்

### டோனி 'கூல்' பதில்

ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான முதலாவது தகுதி ஆட்டத்தில் அந்த அணியிடம் தோல்வியடைந்த பின்னர் கருத்துத் தெரிவித்த சென்னை அணியின் தலைவர் டோனி, 'சென்னை ஆடுகளத்தை இன்னும் சிறப்பாக மதிப்பிட்டிருக்க வேண்டும்' என்று தெரிவித்தார்.
ஆட்டம் முடிந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: சேப்பாக்கம் எங்களது சொந்த மைதானம். ஆடுகளத்தின் நிலைமையை உடனடியாக மதிப்பிட்டிருக்க வேண்டும். நாங்கள் ஏற்கனவே இங்கே 7 ஆட்டங்களில் விளையாடியுள்ளோம். இது சொந்த மைதான அணிக்கு கூடுதல் பலம். ஆடுகளம் எப்படி செயலாற்றும் என்பதை நாங்கள் அறிந்திருக்க வேண்டும் - என்றார். (ம)



## கோல்மழை உதயசூரியனைச் சரித்தது சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம்

யாழ்ப்பாணம், மே 9
பிரசாந்தின் கோல்மழையின் உதவியுடன் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தியது சைனிங்ஸ் விளையாட்டுக்கழக அணி.
வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் 5ஆவது ஆண்டாக நடத்தும் வல்வைக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சைனிங்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதியது.
9:2 என்ற கோல் கணக்கில் சைனிங்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
பிரசாந் 7 கோல்களையும், தீபன், செந்தூரன் இருவரும் தலா ஒவ்வொரு கோலையும் பதிவு செய்தார்கள். (ஒ.23)




## அத்லெட்டிகோ கழகத்தினது அணித்தலைவர் வெளியேறுகிறார்

லா லிகா மற்றும் சம்பியன்ஸ் லீக் தொடர்களில் விளையாடிவரும் ஸ்பெய்னின் அத்லெட்ரிகோ மட்ரிட் அணியின் தலைவர் கோடின் அந்த அணியில் இருந்து வெளியேறும் முடிவை அறிவித்துள்ளார்.
அத்லெட்ரிகோ மட்ரிட் அணியில் கடந்த 9 வருடங்களாக விளையாடி வருகின்றார் கோடின். இவருக்கும்அத்லெட்ரியோ மட்ரிட் அணிக்கும் இடையிலான ஒப்பந்தம் அடுத்த மாதத்துடன் முடியவுள்ளது. இந்த நிலையில் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கும் எண்ணமில்லை என்று அறிவித்துள்ளார் கோடின். இத்தாலியின் கழகமொன்றுடன் அவர் பெரும் தொகைப் பணத்துக்கு ஒப்பந்தமாகவுள்ளார் என்று தகவல்கள் கசிந்துள்ளன. பெரும்பாலும் இன்டர் மிலன் அணிக்காகவே அவரின் ஒப்பந்தம் அமையவுள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

## தலைவராகிறார் கிரீஸ்மன்

அத்லெட்ரிகோ மட்ரிட் அணியின் தலைமைப் பொறுப்பு கிரீஸ்மனுக்கு வழங்கப்பட வாய்ப்புண்டு என்று கருதப்படுகிறது.
அத்லெட்ரிகோ மட்ரிட் அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்த கோடின் அந்த அணியில் இருந்து வெளியேறும் முடிவை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள நிலையில் அடுத்த தலைவராக எவரை நியமிப்பது என்பது தொடர்பில் அணி நிர்வாகம் பரிசீலித்து வருகிறது. அந்த இடத்துக்கு கிரீஸ்மன் நியமிக்கப்பட வாய்ப்புண்டு என்று கருதப்படுகிறது. (ம)



### ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் தொடர்

# மெஸ்ஸியின் பார்சாவை வெளியேற்றிய லிவர்பூல்

## இந்த வருடமும் இறுதிக்குத் தகுதிபெற்றது






ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பார்சிலோனாவை திரில்லாக வீழ்த்தி இறுதிக்குத் தகுதி பெற்றது லிவர்பூல் கழகம்.
ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் லிவர்பூல் மற்றும் பார்சிலோனா அணிகள் மோதின. சம்பியன்ஸ் லீக் விதிப்படி அரையிறுதி ஆட்டத்தில் இரண்டு அணிகளும் தலா இரு தடவைகள் மோதவேண்டும். ஒட்டுமொத்தமாக எந்த அணி அதிக கோல்களைப் பதிவுசெய்கின்றதோ அந்த அணியே இறுதிக்குச் செல்லும்.
பார்சிலோனாவின் மைதானத்தில் முன்னதாக இடம்பெற்ற அரையிறுதியின் முதலாவது லெக்கில் பார்சிலோனா 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இரண்டாவது லெக்கில் நான்கு கோல்களைப் பதிவுசெய்து பார்சிலோனாவை கோல் எதுவும் பதிவுசெய்யாமல் தவிர்த்தால் மட்டுமே லிவர்பூலால் இறுதிக்குத் தகுதி பெறலாம் என்ற நிலமை.
நிலமையின் தீவிரத்தை உணர்ந்த லிவர்பூல் அணியின் வீரர்கள் ஆரம்பத்தில் இருந்து சிறந்த முறையில் விளையாடினார்கள். 7ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணியின் ஓரிஜி முதலாவது கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.
இரண்டாவது பாதியில் 54ஆவது மற்றும் 56ஆவது நிமிடத்தில் லிவர்பூலின் சார்பாக மேலும் இரண்டு கோல்கள் பதிவாகின. தற்போது ஒட்டுமொத்தக் கோல்கள் 3:3. எந்த அணி இன்னொரு கோலைப் பதிவுசெய்கின்றதோ அந்த அணியே இறுதிக்குத் தகுதி பெறும் என்ற நிலையில் ஆட்டம் முடிவதற்கு 11 நிமிடங்கள் இருக்கையில் அலெக்சாண்டர் கோலொன்றைப் பதிவு செய்து லிவர்பூலை இறுதிக்குத் தகுதி பெறச்செய்தார்.




சம்பியன்ஸ் லீக் தொடரில் கடந்த வருடமும் லிவர்பூல் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது. எனினும் கிண்ணத்தைக் கைப்பற்ற அந்த அணியால் முடியவில்லை. ரியல்மட்ரிட் அணியிடம் கிண்ணக் கனவைப் பறிகொடுத்தது. (ம)

# மான்செஸ்டர் யுனைட்டெட்டை வலிமைப்படுத்த டைபாலா

## 85 மில்லியன் பவுண்டுக்கு பேச்சு

ஸ்பானிய கழகங்களுள் ஒன்றான யுவான்டஸ் அணிக்காக விளையாடி வரும் டைபாலாவை 85 மில்லியன் பவுண்டுக்கு வாங்க பேச்சுவார்த்தையை தொடங்கியுள்ளது மான்செஸ்டர் யுனைடெட் கழகம்.
இங்கிலீஷ் பிறிமியர் லீக்கில் தலைசிறந்த கால்பந்து அணிகளில் ஒன்று மான்செஸ்டர் யுனைடெட். இந்தத் தொடரில் மான்செஸ்டர் யுனைடெட் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இதனால் தரவரிசையில் 6ஆவது இடம் பிடித்து யூரோ சம்பியன்ஸ் லீக் தொடருக்கான வாய்ப்பை இழந்தது.
இதனால் அணியை வலிமைப்படுத்த அந்த அணியின் பயிற்சியாளர் முடிவு செய்ததன் அடிப்படையில் இத்தாலியின் தலைசிறந்த கழகமான யுவான்டஸில் விளையாடி வரும் பவுலோ டைபாலாவை 85 மில்லியன் பவுண்டுக்கு வாங்குவதற்காக பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளது.
முன்கள வீரரான டைபாலா ஆர்ஜென்டினாவைச் சேர்ந்தவர். இவர் கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து யுவான்டஸ் அணிக்காக விளையாடி வருகிறார். இவர் 125 போட்டிகளில் விளையாடி 57 கோல்களை அடித்துள்ளார்.



# ஹைதராபாத்தை வெளியேற்றியது டெல்லி தகுதியாட்டத்தில் சென்னையுடன் மோதல்!







ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற விலகல் ஆட்டத்தில் ஹைதராபாத்தை வெளியேற்றியது டெல்லி. இதையடுத்து நாளை நடைபெறும் இரண்டாவது தகுதி ஆட்டத்தில் சென்னையுடன் மோதும் வாய்ப்பை டெல்லி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கப்ரில் 36 ஓட்டங்களையும், பான்டே 30 ஓட்டங்களையும், வில்லியம்சன் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பவுல் 3 இலக்குகளையும், இசாந் சர்மா 2 இலக்குகளையும், போல்ட், மிஸ்ரா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணிக்கு ஆரம்ப வீரர்களான தவான் மற்றும் பிருத்வி ஷா சிறந்த அத்திபாரத்தை அமைத்துக் கொடுத்தனர். அணி 66 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தவான். அணித் தலைவர் ஸ்ரேயாஸ் 8 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். எனினும் பிருத்வி, பண்ட் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். பிருத்வி 56 ஓட்டங்களையும், பண்ட் 49 ஓட்டங்களையும் குவிக்க ஒரு பந்து மீதமிருக்க 165 ஓட்டங்களைப்பெற்று வெற்றிவெற்று டெல்லி.

புவனேஸ்வர் குமார், ரசிட் கான், கலீல் அகமட் மூவரும் தலா இரு இலக்குகளையும், கூடா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது தகுதியாட்டத்தில் சென்னை அணி மும்பையிடம் தோல்வியடைந்தது. இதனால் சென்னைக்கும் விலகல் ஆட்டத்தில் வெற்றிபெற்ற டெல்லிக்கும் இடையில் நாளை இரண்டாவது தகுதியாட்டம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 16 . 09 . 1940

இறப்பு 20 . 04 . 2018

அமரர் இராசையா இராசரெத்தினம்

(உரிமையாளர் - இராசையா மருந்துக்கடை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா)

திதி: பூர்வபட்ச பஞ்சமி (09.05.2019)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழி காட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டொன்று மறைந்ததையா!
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.633, பருத்தித்துறை வீதி,
முத்திரைச் சந்தி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## ஒசாகா முன்னேற்றம்



ஸ்பெய்னின் தலைநகர் மட்ரிட்டில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஒசாகாவை எதிர்த்து ஸ்பெய்ன் வீராங்களை சோரிப்ஸ் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலாவது செற்றைக் கைப்பற்றிய ஒசாகா இரண்டாவது செற்றை 3:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார். மூன்றாவது செற் 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மீண்டும் ஒசாகாவிடம் சென்றது. முடிவில் அவர் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார். (ம)

விற்பனைக்கு
பாவித்த கண்ணாடி அலுமாரி
மற்றும் மரத்தளபாடங்கள்
விற்பனைக்கு உண்டு.
இடம் : ஆனைப்பந்தி
077 935 2976

Techno World
தொழில்நுட்பப் பிரிவு
A/L 2021 ஆரம்பம்
- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.

11.05.2019
சனிக்கிழமை
காலை 8.30

077 017 5346,
077 170 3549
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.